1876-ம் வருஷம்
ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

78-ம் புத்தகம் 27-ம்இல. யாழ்ப்பாணம் 1953-ம்ஆண்டு ஆடிமாதம் 16-ந்திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## தேவதாயாரின் தாயாகிய சந்தானாள்நாயகி

சந்தானாள்நாயகிமட்டிலே விசுவாசிகள் கொண்டிருக்கும் பக்தியானது, திருச்சபையைப்போலவே பழமை வாய்ந்ததெனத் திருச்சபையின் பேர்போன கிரந்தகர்த்தாவான பரோனியஸ் விளம்புகின்றார். ஜெருசலேம்நகரிலே சந்தானாள்நாயகி வசித்துவந்த இல்லத்தைப் பிந்த ஓர்செபக்கூடமாக அப்போஸ்தலர்கள் மாற்றி அமைத்தார்களென்றும் நம்பப்படுகின்றது. சர்வலோகநாயகியின் திருத்தாயாராகத் தேவனாலே தெரிந்துகொள்ளப்பெற்ற இந்தப்பெரும் பாக்கியவதிமட்டிலே ஆதிக்கிறீஸ்தவர்களும், எக்காலத்திலும் வசித்திருந்தவிசுவாசிகளும் இயல்பாகவே அத்துணைபெரும் பக்தி கொண்டிருந்தார்களென்று இலகுவில் விளங்கக்கிடக்கின்றது. அவவின் சீவிய வரலாறுபற்றிய விபரங்கள் அதிகமாக அறியப்படாவிடினும், யேசுக்கிறீஸ்துநாதரின் பாட்டியாராயும், மகாபரிசுத்த கன்னிமரியாயின் தாயாராயும் அவ இருக்கிறா என்பதைவிட வேறென்ன விசேஷத்தை நாம்அறிய வேண்டும்? உலகில் சஞ்சரித்திருந்த அதிமிகபரிசுத்தர்களான திவ்வியயேசுவுடனும், கன்னிமரியாயுடனும் அத்துணைநெருங்கிய நேசபந்தனங்களால இணைக்கப்படுவதாகிய சுதந்தரத்தைப் பெற அவவுடைய மகிமையும், பரிசுத்ததனமும் எத்தன்மையனவாய் இருந்திருக்கவேண்டும்?

இவ்வுலகில் ஒருவரிலிருந்துஒருவர் பிரியாதபடி அவ்வளவுஅந்நியோன்னிய நேசபாசத்தால் இணைக்கப்பட்டிருந்த இம்மூவரும் பரலோக இராச்சியத்திலே இன்னும்கூடிய நேசபாசத்தால் இணைக்கப்பட்டிருக்கிறார்கள்என்பதை விளங்கிக்கொள்வது அவ்வளவுகஷ்டமான ஓர்காரியமல்ல. தம்மை அண்டிவருகிறவர்களுக்காகத் தமது திருக்குமாரத்திமூலம் உலகஇரட்சகரிடம் பரிந்துபேசுவதில் சந்தானாள்நாயகி கையாளுஞ்செல்வாக்கு, வல்லமை எவ்வளவோஅதிசயமானவை. ஓர்முறை பரமஇராக்கினியான தேவதாயார் தம்மிலே வெகுபக்திவைத்திருந்த ஒரு ஆத்துமத்துக்குக் காட்சிஅளித்துச் சொன்னதாவது: "நீ எனதுசெபமாலையைச் சொல்லிமுடிக்கும் ஒவ்வொருமுறையும் சந்தானாளாகிய என்னுடையமாதாவையும் சங்கிக்கும் பொருட்டு ஒருபரமண்டலம், பிரியதத்தம் சேர்த்துச் சொல்லிக்கொள்; ஏனெனில், சந்தானாளைப் பக்திசெய்கிறவர்கள் தங்கள் சகலஅவசரங்களிலும், விசேஷமாய்த் தங்கள் மரணநேரத்திலும் விசேஷசலுகைகளைத் தப்பாமல் பெற்றுக்கொள்வார்கள்" என்பதே. மற்றோர்ஆத்துமத்துக்குத் தேவதாயார் செப்பியதாவது: "எனது தாயார்மட்டில் நீகாட்டும்பக்தி எனது இருதயத்துக்கு இருமடங்கு ஆனந்தத்தையும், அருமையையும் உண்டாக்குகின்றது" என்பதே.

நெடுநாளாக அகோரமான பாவச்சோதனைகளால் தாக்கப்பட்ட ஒரு தபோதனருக்குப் பரலோகஇராக்கினி காணப்பட்டுச் சொன்னதாவது: "எனதுமட்டில் உனக்குள்ள விசேஷ பக்தியின்பொருட்டு இதோ உனது சோதனைகளை அகற்றி உனக்குஆறுதல் உண்டாக்குவேன்; ஆனால் எனது தாயாரை நீ பக்திசெய்யவேண்டும்என்றும், அதன்நிமித்தம் உனக்கு இன்னும்பெரிய ஆசீர்வாதங்களை அருளுவேன்என்றும் நீ அறியவிரும்புகிறேன்; இன்னும் எனதுதாயாரைப் பக்திசெய்கிறவர்களை இவ்வுலக நிர்ப்பாக்கியங்களில்நின்று இரட்சிப்பதாகவும், அவர்களுக்குச் சீவியத்தின் கடைசிமுடிவையும் கொடுப்பதாகவும் எனது திருக்குமாரனாகிய யேசுக்கிறீஸ்துநாதர் எனக்கு வாக்களித்திருக்கிறார்; எனது தாயாரின் பக்தியை நீயும்அனுசரித்து, மற்றவர்களும் அதைஅனுசரிக்க அவர்களை உற்சாகப்படுத்திவிடு" என்பதே. பரமஇராக்கினி அளித்தகாட்சியால் ஸ்திரப்படுத்தப்பட்ட அந்தத் தபோதனர், தேவதாயாரை வாழ்த்திச் சொல்லிவந்த பிரியதத்தமந்திரத்துக்குப்பிறகு பின்வருஞ் செபத்தையுஞ் சொல்லிவருவார்: "உமது கன்னித்துவ மாமிசத்தை உமக்குத்தந்தவவும், பேரின்பஇராசமுள்ள உமதுதாயாருமாகிய சந்தானாள்நாயகியும் ஆசீர்வதிக்கப்பட்டவவாமே!"

சந்தானாள்நாயகிமட்டில் விசேஷ பக்தி வைத்தவரும், அந்தப்பக்தியைப் பரப்புவதிலே அயராமல்உழைத்தவருமான பேர்போன வித்தியாபாரகராகிய ரிறிமெத்தேயுஸ் என்றமடாதிபர் சந்தானாள்பேரில் எழுதிய புஸ்தகங்களுள் ஒன்றிலே பின்வரும்பாகம் காணக்கிடக்கின்றது.

"மனுஷசுபாவத்தில் தமது பாட்டியாரான சந்தானாள்மாதாவுக்கு யேசுநாதசுவாமி யாதொன்றையும் மறுக்கமாட்டார். அவவுடைய மகிமைப்பிரதாபமுள்ள குமாரத்தியும் தமது தாயார்கேட்கும் ஒவ்வொருமன்றாட்டையும் கிருபைபாலிக்கத் தமதுதிருக்குமாரனை மன்றாடுகிறா. ஆகவே, மனிதரின் சகல இக்கட்டு இடைஞ்சல்களிலும் உதவிசெய்யும் விசேஷவரத்தைச் சர்வேசுரன் அவவுக்குக் கொடுத்திருக்கிறார். சந்தானாள்நாயகியை வழிபடுகிறவர்களுக்கு இவ்வுலகிலாவது, மறுவுலகிலாவது யாதொருகுறையும் நேராது. அவவை நீங்கள் நேசித்துவந்திருப்பீர்களாகில், தேவன் அவவை எவ்வளவாக மதிக்கிறார்என்பதை நீங்கள் உணருவீர்கள். அவகேட்கிறவரங்கள்யாவையும் அவர் கொடுக்கிறார். தமதுபேரில்பக்தியுள்ள அடியார்களுக்கு அவ நாளாந்தம்புரிகிற உதவிசகாயங்கள் எண்ணில்லாதவை என்பதை நீங்கள் எல்லாரும் நம்புங்கள்."

சந்தானாள்மாதாவிலே விசேஷபக்தி வைக்கவும், அவபேரால் நவநாட்கள் செய்து அவவுடைய வல்லபமுள்ள மனுப்பேசுதலைச் சோதித்தறியவும் இன்னும்கூடிய உற்சாகமொழிகள் தேவைப்படுகின்றனவா? சந்தானாள் மாதாவின் திருநாளை ஏற்படுத்திவிட்டவரான 13-ம் கிறகோரியார் என்னும் பாப்பானவர் சொல்வதைக் கேளுங்கள்: "சந்தானாள்மாதாமூலம் மனுச்சென்மத்துக்கு எவ்வளவோ ஆசீர்வாதங்கள் இறங்கிவருகின்றன. அதனாலேயே சந்தானாள்மாதா ஆண்டவரிடம் இடைவிடாமல் மன்றாடிக்கொண்டு இருக்கிறாஎன்று நாங்கள் நம்புகிறோம். எங்கள் இரட்சகரான யேசுக்கிறீஸ்துநாதரை இவ்வுலகில் பெற்றெடுக்க மிகவும் தகுதியுள்ளவவெனக் கணிக்கப்பட்ட மாசில்லாத கன்னிமரியாய் அவவிடத்தில்நின்றே பிறந்துவந்தார்." இவரைப் பின்தொடர்ந்துவந்தவரான 15-ம் கிறகோரியார் எனும்பாப்பானவர் சொல்லுவது: "பரிசுத்தகன்னித்தாயாரின் மாதாவுக்கு நாம் எவ்வள்வு அன்பு காட்டுகிறோமோ, அவ்வளவாகத் தேவனின் ஏகப்பேறான குமாரனாகிய யேசுக்கிறீஸ்துநாதரை இவ்வுலகத்திற்குஅளித்த பரிசுத்தகன்னிகையின் மனுப்பேசுதலையும், உதவி சகாயங்களையும் பெற்றுக்கொள்ளுவோம்."

மத்தியயுகங்களிலே சந்தானாள் மாதா கஸ்திப்படுவோருக்கு ஆறுதலாகவும், ஏழைகளின் தாபரமாகவும், வருத்தக்காரரின் ஆரோக்கியமாகவும், பிள்ளைப்பாக்கியம் அற்றோர்க்குப் பரிபாலகியாகவும், கர்ப்பவதிகளின் சகாயமாகவும், இல்லறஸ்திரிகளுக்கு முன்மாதிரியாகவும், கைம்பெண்சாதிகளுக்குப் பாதுகாவலாகவும், மரணிக்கிறவர்கட்குச்சகாயமாகவும் மன்றாடப்பட்டுவந்திருக்கிறா.

சீவியத்தின் துக்கதுயரங்களை உணராதவர்கள் ஆர்உண்டு? அப்படியானால் உனது துக்கதுயரங்களிலே சந்தானாள்மாதாவை அண்டிப்போய் அவவின் கருணைநிறைந்த காதுகளுள் உன் துக்கதுயரம் யாவற்றையும் சொல்லிவிடு. இவ்வுலக துக்கதுயரங்களை வெகுவாய்அனுபவித்த சந்தானாள் மாதா உன்னை ஆறுதற்படுத்துவா. உனக்குஆறுதல்செய்யாமல் உன்னை அனுப்பமாட்டா. உன்சீவியத்துக்கு வேண்டிய ஊண் உடை இல்லாமல் வருந்துகிறாயா? உன்வறுமையை நீக்கும்படி அவவிடம்கேள். இவ்வுலகில் கஸ்திப்படுகிறவர்களிடம்போய் அவர்களுக்கு இன்பம்ஊட்டுவது அவவுக்குப் பேரானந்தமாய் இருந்தது. அர்ச். தமாசேன் அருளப்பர் கூறுவதுபோல, சந்தானாள்மாதாவும், அவவின் பத்தாவாகிய சுவக்கின்முனீந்திரனும் தங்கள் சம்பத்தின் மூன்றில்ஒருபாகத்தை ஏழைகளுக்கே செலவழித்தார்கள். அவர்கள் இப்போது பரலோகத்தில் இருப்பதால், முன்னிலுங்கூடிய உபகாரசகாயங்கள் புரிவது அவர்களுக்குப் பேரானந்தமாகும்.

நீயாவது, உனக்கு அருமையானவர்களாவது சரீரவருத்தத்தினால், அன்றேல் மாறாதநோயால் வருந்துகிறீர்களா? அப்படியானால் உங்கள் வருத்தத்தைச் சந்தானாள்மாதாவின் பாதத்தில் ஒப்படையுங்கள். அவவுடைய பேர்பெற்ற யாத்திரைத்தலங்களில் அவவால் குணமாக்கப்பட்ட வருத்தக்காரர் தங்கள் நன்றியின் சாதனமாக விட்டுப்போயிருக்கும் வருத்தசம்பந்தமான உபகரணங்களின் குவியலே சந்தானாள்மாதா உங்கள் வருத்தங்களையும் தீர்ப்பாஎன்பதற்கு மறக்கமுடியாத அத்தாட்சி ஆகும் அல்லவா?

அன்றேல் உன்ஆத்துமத்தை நித்தியகேட்டுக்குள்ளாக்கும் பாவவியாதி உன்னில்படர்ந்து உன்னைப்பயமுறுத்துகின்றதா? அப்படியானால், சந்தானாள் மாதாவின் விசேஷகருணைக்கு இலக்காகிறாய். அவவை நீஅண்டிப்போனால் உன் பாவப்பிணியைத்தீர்க்க—பச்சாத்தாபப்பட்டு நல்லபாவசங்கீர்த்தனஞ் செய்ய உனக்கு உதவிபுரிந்து நீஇழந்துபோன மனச்சமாதானத்தை உனக்குத் திரும்பவும் தருவா அவ.

உனதுசொந்தக்குற்றம் இல்லாமல் நீ பிள்ளைப்பாக்கியம் இல்லாத புருஷனாய், அல்லது பெண்சாதியாய் இருக்கிறாயா? சந்தானாள்மாதாவை அண்டிப்போ. மலட்டுத்தனத்தின் ஈங்கிஷையை வீரத்துவமானதைரியத்தோடு தாங்கித் தேவஅருளால் பின்னடைந்த வயதில் உலகத்திற்பிறந்த குழந்தைகளில் மிகவும் சவுந்தரியமுள்ள குழந்தையைப் பெற்றெடுத்த சந்தானாள் உன் மலட்டுத்தனத்தைத் தீர்ப்பா. அன்றேல் சகலஆசீர்வாதங்களிலும்மேலான ஆசீர்வாதமாகிய பிள்ளைப்பாக்கியமுள்ள புருஷன், பெண்சாதியாய் இருக்கிறாயா? உன் அருந்தவக்கனிகளை ஆண்டவருக்கு உகந்த பிள்ளைகளாக்க வேண்டியஉதவியைச் சந்தானாள் மாதாவிடம் இரந்து மன்றாடு.

தேவஅருளால் கர்ப்பந்தரித்து உன் உதரக்கனியை எப்போது காணலாம் என்று காத்திருக்கும் தாய்மாரில் ஒருத்தியாய் நீ இருக்கிறாயா? சந்தானாள் மாதாவின் அண்டையிற்போய் அவவை மன்றாடி உனக்காவது, உன்உதரக்கனிக்காவது ஆபத்துஇல்லாமல் உன் கனியைப் பெற்றெடுக்கும் வரத்தை அவவிடம்கேள்—அடிக்கடிகேள். அவ தவறாமல் பெற்றுத்தருவா.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# சர்வேசுரா! பாவியாகிய என்மேல்

ஜேம்ஸ்சுவாமியார் அர்ச். யூதா ததேயுவின்கோவில் விசாரணைக்குருவானவர். அங்குள்ள கத்தோலிக்க மக்கள்யாவரும் இத்தாலியரே. அவர் எல்லாருடனும் அன்பாயிருப்பார். ஆனால், சாத்தோ குடும்பத்திலே அவருக்குப் பிரியம்அதிகம். அந்தக்குடும்பத்தின் மூத்தமகனான அந்தோனி சாத்தோ நல்லதேகக்கட்டும், வசீகரமும்வாய்ந்தவன். கோவிற்பாடகரிலே அவனும்ஒருவன்.

ஒருநாள் தானோஎன்னும் இத்தாலியன்ஒருவன் வேலைகேட்டுச் சுவாமியாரிடம்வந்தான். "சுவாமி! ஆர்மோனியர்வாசிக்க எனக்குநன்றாகத்தெரியும்; உங்கள்கோவிலில் எனக்கு வேலைகொடுங்கள்; பிறருக்கும் ஆர்மோனியம்வாசிக்கக் கற்றுக்கொடுக்கிறேன்" என்றான்.

உடனே சுவாமியாருக்கு அந்தோனி சாத்தோவின் ஞாபகம்வந்தது. "இங்கு ஒருசிறுவன் இருக்கிறான்; நன்றாய்ப் பாடக்கூடியவன்; ஆர்மோனியம்வாசிக்க அவனுக்குக் கற்றுக்கொடு; அவன் தகப்பனார் ஏழையானதால் நானே உனக்குச் சம்பளம்தருகிறேன்" என்று குருவானவர்சொல்லித் தானோவைச் சிறுவனின் இல்லத்துக்கு அழைத்துச்சென்றார்.

சிறுவன்கொண்ட ஆனந்தத்துக்கோ ஓர்அளவில்லை. ஆசையோடு கற்றதுடன், அண்டைவீட்டாருக்குச் சிறுசிறுஊழியங்கள்செய்து சோந்தபணங்கொண்டு "அக்கோடியன்" எனும் ஒருவாத்தியப்பெட்டியும் வாங்கிக்கொண்டான். பின்னர் 16 வயதானதும் அந்தோனி சாத்தோ சுவாமியாரது சிபாரிசுக்கடிதத்தோடு ஓர் வாத்தியக்கோஷ்டியின் தலைவரை அணுகினான். அவன் வாசித்ததைக் கேட்ட தலைவர்மகிழ்ந்து, "நாளைமுதல் நீ என்கோஷ்டியில் சேர்ந்துகொள்ளலாம். வாரத்துக்கு இருபது டலர் சம்பளம்" என்றார்.

சீக்கிரம் அவன்புகழ் எங்கும்பரவியது. வாத்தியம்வாசிப்பதிலே அவன் சமர்த்தனானான். அத்தோடுஅவன் முகவசீகரமு முடையவனாகவே, சங்கீதக்கச்சேரிக்கு வரும் பெண்கள்பலர் அவனைத் தங்கள்இல்லங்களுக்கு வரும்படிஅழைத்தனர். ஆனால், கோஷ்டியின் தலைவர் சிறுவனைஎச்சரித்தார். "இந்தப்பெண்கள் நல்லவர்கள்தான், பணக்காரிகள். ஆனால், உன்னைப் போன்றசிறுவர்கள் அவர்களின்வீட்டுக்குப் போவதுநல்லதல்ல. அதனால் கச்சேரிமுடிந்ததும் நேரே அம்மாவிடம் போய்விடு" என்றார்.

அந்தோனி கீழ்ப்படிந்தான். கச்சேரிக்குப்பிறகு எங்கும்போகமாட்டான். நேரே வீட்டுக்குப்போவான். சம்பளத்தையும் அப்படியே தாயிடம் கொண்டுபோய்க் கொடுத்துவிடுவான்.

இப்பொழுதுஅவனுக்கு வாரச்சம்பளம ஐம்பதுடலர். சங்கீதஆசிரியர் தானோவின்புகழும் பரவியது. ஆனால், ஜேம்ஸ்சுவாமியாருக்குக் கவலையே. ஏனெனில், அந்தோனி முன்போல அவரிடம்போவதில்லை. ஞாயிற்றுக்கிழமை சிறுவர்பூசையிற்தானும் ஆர்மோனியம வாசிக்கப்போவதில்லை.

இந்தச்சந்தர்ப்பத்திலே முசோலினி ஹிற்லருடன்சேர்ந்தான். அந்தோனி தன்பெற்றோரின் சம்மதத்தைக் கேளாது அமெரிக்க கடற்படையிற் சேர்வதாக ஒப்பந்தஞ்செய்துகொண்டான். அன்று இரவு சங்கீதக்கச்சேரிக்குப் போகுமுன் கருமத்தை வீட்டில் வெளியிட்டான், தாய்ஓலமிட்டு அழத்தொடங்கினாள். தகப்பனார் எழுந்து ஒன்றும்சொல்லாமலே ஐந்துநிமிஷம் அங்குமிங்கும்நடந்தபின், "அந்தோனி தேசபக்தன்; அமெரிக்காவை அவன் நேசிக்கிறான்; நமதுநாடு அது. அவன் யுத்தத்திலே சேர்ந்ததுபற்றி நாம்எல்லோரும் பெருமைப்படவேண்டும்; முசோலினி இத்தாலியைப் பிசாசுக்கு விற்க முயன்றிருக்கிறான்; பாப்பானவரும் அந்தோனியும் இத்தாலியைக் காப்பாற்றுவார்கள்" என்றார்.

"இன்றுதான் கடைசி; நாளைத் தினம் நான் கப்பற்படையிற் சேரப் போகிறேன்" என்று வாத்தியக்கோஷ்டித்தலைவரிடம் அந்தோனி மொழிந்தான். "அப்படியானால் பன்னிரண்டு மணிக்கே போய்விடு; போகுமுன் நீ சற்று இளைப்பாறவேண்டாமா? நீ கடற்படையிலிருந்துவிலகியதும் நான் எங்கிருந்தாலும் முதலில் என்னிடம் வா; உனக்கென்று ஒருநல்லவேலை காத்துக்கொண்டிருக்கும்" எனத் தலைவர்கூறினார்.

பயிற்சிபெறுவதற்காக அந்தோனி சாந்தியாகோநகருக்குப் போனான். மற்றவர்களுடன் பேசிப்பழகி வசிக்கக் கற்றுக்கொண்டதும் அவன் குணமும் மாறியது. அர்ச். யூதாததேயு கோவிலும், ஜேம்ஸ்சுவாமியாரின் அன்பும் அவன்நினைவைவிட்டு மறையத்தொடங்கின.

"எப்பொழுதும் நீ வாலிபனாய் இருக்கமுடியுமா? இளமை இருக்கும் போதுதானே நீ இன்பம்அனுபவிக்கலாம். இந்தச்சந்தர்ப்பத்தைக் கைநெகிழவிடாதே" என்று அவன்தோழர்கள் கூறினார்கள். சங்கீதத்தை ரசித்து அனுபவிக்குமாறு அவன் நடனசாலைகளுக்குச் சென்றான். வாலிபரின் வாழ்க்கையைப்பாழாக்கிப் பணம்சம்பாதிக்கும்படி வந்திருந்தபெண்களை அவன்சந்தித்தான். "நீயும் ஒருத்தியைப் பார்த்துக்கொள்; இங்கு இருக்கும்வரை நீ எல்லோரையும்போல் இருக்கவேண்டும்" எனக் கெட்டநண்பர்கள் அவனைத்தூண்டினர். அவன் தேடிப்போகவில்லை. ஒருபெண்பிசாசு அவனுக்குவலையிட்டாள். அவள் ஒவ்வொருநாளும் அவனுக்காக வாசலில் காத்திருப்பாள்.

அந்தோனி செபத்தை மறந்தான். அவன் செபியாதபோதிலும் அவன் தாய் அவனுக்காகக் கடவுளைப்பிரார்த்தித்துவந்தாள். கடவுளின்சம்மனசுகள் அவனுடன்இருந்தார்கள். ஓர் இரவு அவன் வீடுதிரும்பினான். விமானம்ஏற்றிச்செல்லும் கப்பலில் அவனை யுத்தத்துக்குப்போக வேண்டுமென அறிவிக்கப்பட்டது. மறுநாள்இரவு அந்தப்பெண்பேயும் அவனுக்காகக் காத்திருக்கவில்லை. அந்தோனியும் அதைப்பற்றி விசனிக்கவில்லை. அவன் விரும்பியதெல்லாம், தன்பெற்றோர் சிநேகித்தார்முன் ஓர்இத்தாலியபெண்ணை மணமுடித்து இல்வாழ்க்கை நடத்தவேண்டுமென்பதே.

யுத்தக்கப்பலில் வேலையைக்கடத்துவதற்காக ஒருமுறையாத்திரம் அவன் பூசைக்குப்போனான். பின்னர் போகவேயில்லை. குருவானவர்வந்துவிட்டால் கடினவேலையாயிருப்பதுபோல் காட்டிக்கொள்வான்.

ஒருநாள்அதிகாலை ஐப்பானியவிமானங்கள் அந்தக்கப்பலுக்குமேலாகப் பறந்தன. குண்டுகள் சரமாரியாய் விழுந்தன. கப்பலில் நெருப்புப் பற்றிக்கொண்டது. "இனிக் கப்பலைக் காப்பாற்றமுடியாது. எல்லோரும் கிளம்புங்கள்" என்றஉத்தரவு பிறந்தது. அந்தோனியால் படகில்இறங்க முடியவில்லை. கடலுள்குதித்துச் சப்பாத்துகளைக் கழற்றிஎறிந்தான். குண்டு, மருந்துமுதலிய யுத்தஉபகரணங்களைக்கொண்ட பெட்டி ஒன்று அவன்கைக்கு அகப்பட்டது. அதைப் பிடித்துக்கொண்டான். காற்சட்டை நனைந்து கனமாய்இருந்தமையால் அதையும் எறிந்துவிட்டான். மருந்துப்பெட்டி கப்பலின்அருகில் இருந்தால் ஆபத்துஎன்பதை உணர்ந்து அதைத் தூரத்தள்ளிச்சென்றான்.

(தொடரும்)

# சுதேச வர்த்தமானம்



## யாழ்ப்பாணமும் வெங்காயமும்

யாழ்ப்பாணக்குடாநாடு இலங்கை முழுவதுக்கும் ஈரவெங்காயம் உதவும் மத்தியதானமாய் இருந்துவருகிறது. ஆனால், யாழ்ப்பாணத்துக்கு ஈரவெங்காயம் ஏற்றிச்செல்வது தடுக்கப்பட்டிருப்பதாகக் கெசற்றிலே பிரசித்தமாகியிருக்கிறது. இதற்குக்காரணம், யாழ்ப்பாணத்திலேயே ஈரவெங்காயத்தில் கொள்ளைலாபம் அடிப்பதாகும். கடந்த காலத்திலே யாழ்ப்பாணஈரவெங்காயம் கொழும்பிலுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்களில் கட்டுப்பாட்டு விலைகொடுத்து வாங்கி யாழ்ப்பாணம் கொண்டுவந்து கூடுதலானவிலைக்கு விற்கப்பட்டிருப்பதாகக் கண்டறியப் பட்டிருக்கிறது. அதனால் தென்பகுதியிலிருந்துவரும் மோட்டார்வண்டிகளும், பிறவும் ஆனையிறவில் நிறுத்திப் பரிசோதிக்கப்படுகின்றன.

## முஸ்லீம்களின் வேண்டுகோள்

காணியற்ற முஸ்லீம்களின் யாழ்ப்பாணச்சங்கமானது வடமாகாண ஏசண்டருக்குச் சமர்ப்பித்திருக்கும் மனு ஒன்றிலே, கமத்தொழிலிலும், மிருக வளர்ப்பிலும் பெரிதும அனுபவமுள்ளவர்களாய்த் தங்களுள் போதிய ஒரு தொகையானோர் இருப்பதாகவும், தங்களுள்ளே காணியற்றவர்களுக்குக் குடியேறும்படியான காணிகள் அரசாங்கத்தாலே கொடுபடுமிடத்துத் தாங்கள் அவைகளை நன்குபயன்படுத்த முடியுமென்பதாகவும் தெரிவித்திருக்கின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லீம்கள் வேறிடங்களிற்போய்க் குடியேறித் தங்களுடையநிரந்தரமான தொழிலாகக் கமத்தொழிலை மேற்கொண்டு உயிர்வாழ்வதா? அன்றேல் யாழ்ப்பாணத்திலே முஸ்லீம்பகுதியில் சஞ்சரித்திருந்து வறுமை, நோய் ஆகியவற்றின் மத்தியில் அழிந்தொழிவதா? என்ற நிலைமை தங்களுக்கு ஏற்பட்டுவிட்டதாகவும் அந்தமனுவில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

## தொண்டமானாற்றுக் கடலேரி

1918-ம் ஆண்டு மாசிமாதம் தொடக்கப்பட்டிருந்த தொண்டமானாற்றுக் கடலேரித்திட்டவேலை இப்போது பூர்த்தியாகிவிட்டது. இது 18 மதகு வாயில்களுடன்கூடிய 613 அடி நீளமான தடைமதிலை அடக்கியுள்ளது. இதனால் ஏரியிலுள்ளதண்ணீரை நல்ல தண்ணீராகப் பாதுகாத்து, அதன் கரையையடுத்த ஆயிரத்துக்குமேற்பட்ட ஏக்கர் பதிந்தநிலத்தை நீர்ப்பாய்ச்சக்கூடியதாயிருக்கும். உப்புநீர் கலவாது சேகரிக்கப்படும சுத்தசலம் அடுத்தபோகமுதல் உதவப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 15 லட்சம் ரூபாசெலவில் முடிக்கப்பட்டுள்ள இத்திட்டம் திரு. கே. பாலசிங்கம்அவர்களால் உருவாக்கப்பட்டு, அப்போது உள்நாட்டு மந்திரியாயிருந்த திரு அருணாசலம் மகாதேவா அவர்கள் எடுத்துக்கொண்டமுயற்சியால் கைகூடுவதாயிற்று.

## பொலனறுவைப் பெரும்பிரிவு

வடமத்தியமாகாணத்திலே நவமாக வகுக்கப்பட்டுள்ள பொலனறுவைப் பெரும்பிரிவு வருகிறபுரட்டாசிமாதம் 1-ந் திகதியன்று அதிகாரபூர்வமாகப் பிரகடனஞ்செய்யப்பட விருக்கிறது. இப்புதிய பெரும்பிரிவு மாத்தளைப் பெரும்பிரிவிலுள்ள மூன்று தலைமைக்காரர் பகுதிகளையும் தனதுஎல்லைக்குள் அடக்கியிருக்கும். பொலனறுவைவாசிகள் அரசாங்கசம்பந்தமான கருமங்களைமுடிப்பதற்கு இனிமேல் அனுராசபுரஞ்செல்லாது பொலனறுவையிலேயே சகலத்தையும் நடத்திமுடிக்க இதனால் வசதிஏற்பட்டுள்ளது.

## புதிய உபநீதியாசர்கள்

சுப்பிறீங்கோட்டுப் புதிய உபநீதியாசர்களாக நியமனஞ்செய்யப்பெற்ற சங். எச். டபிள்யு. ஆர். வீரசூரியஅவர்களும், சங். கே. டி. டி சில்வா அவர்களும் சென்றவெள்ளிக்கிழமை விசுவாசப்பிரமாணஞ்செய்து தமது பதவிகளை ஏற்றுக்கொண்டார்கள். சங். வீரசூரிய அவர்கள் விசுவாசப்பிரமாணஞ் செய்ததும் பம்பலப்பிட்டி, பரிசுத்த தேவமாதாவின் கோவில்சென்று திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதஆராதனைக்குச் சமுகமளித்துத் தேவானுக்கிரகத்தை இரந்துகொண்டு கொழும்புச் சுப்பிறீங்கோட்டில் வழக்குவிசாரணையைத்தொடக்கினார்.

## இலவசமதியப் போசனம்

பாடசாலைப்பிள்ளைகளுக்குக் கொடுபட்டுவரும் இலவச மத்தியானப்போசனம் இனிமேல் முதல்ஐந்துவகுப்புப் பிள்ளைகளுக்குமாத்திரம் உதவப்படுமெனச் சமீபத்திலே கட்டுப்படுத்தப்பட்டது. ஆனால், தற்போதோ இந்த மத்தியானப்போசனத்தை இப்போதைய பாடசாலைத்தவணைமுடிவிலே—அதாவது வருகிறஆவணிமாத நடுப்பகுதியிலே முற்றாகநிறுத்திவிட அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது இத்தாலே ஏழரைலட்சம் பிள்ளைகளுக்கு மேல் இலவசமத்தியானப் போசனம் நிறுத்தப்பட்டுக் கஷ்டத்துக்குள்ளாவார்கள். நிகழும் அரசிறைவருடத்திலே இலவசமத்தியானப் போசனத்துக்கென்று அரசாங்கம் ஒருகோடி ரூபா அனுமதித்திருந்தது. சமீபத்திலே ஆரம்பபாடசாலைப் பிள்ளைகளுக்கு மாத்திரமே இந்தப்போசனம் கட்டுப்படுத்தப்பட்டும் அரசாங்கம் ஒதுக்கிய ஒருகோடிரூபாவும் போதாமற் போய்விட்டது.

## தபால், தந்திச்சலார்ஏற்றம்

உள்நாட்டுக் கடிதங்களின் தபாற்சலார், இந்தியா, பாகிஸ்தானுக்கு அனுப்பப்படும் கடிதங்களின் தபாற்சலார், பார்சல்சலார், தந்திச்சலார், கடிதங்களின்பதிவுசலார் ஆதியன இம்மாதம் 15-ந் திகதியாகிய நேற்றுப் புதன்கிழமைமுதல் ஏற்றப்பட்டிருக்கின்றன.

ஒருஅவுன்சுக்கு மேற்படாத உள்நாட்டுக்கடிதத்துக்கு முத்திரைச்சலார் 10 சதம். ஒரு அவுன்சுக்குமேற்படும் ஒவ்வோர்அவுன்சுக்கு அல்லது பாகத்துக்கு மேற்கொண்டு 10 சதம்.

இந்தியா, பாகிஸ்தான்நாடுகளுக்கு அனுப்பப்படும் ஒரு அவுன்சுக்குமேற்படாத கடிதத்துக்கு 15 சதம். ஒரு அவுன்சுக்குமேற்படும் ஒவ்வோர்அவுன்சுக்கு, அல்லது பாகத்துக்கு மேற்கொண்டு 10 சதம்.

பதிவுசலார்—உள்நாட்டுக்கடிதம் 25 சதம். வெளிநாட்டுக்கடிதம 30 சதம். எக்ஸ்பிறெஸ் கடிதம் 50 சதம்.

ஒருறாத்தல்நிறைக்கு மேற்படாத உள்நாட்டுப்பார்சலுக்கு 35 சதம், ஒருறாத்தலுக்குமேற்படும் ஒவ்வோர் றாத்தலுக்கு, அல்லது பாகத்துக்கு மேற்கொண்டு 20 சதம்.

உள்நாட்டுச் சாதாரண தந்திக்கு முதற் பத்துச்சொற்களுக்கு 75 சதம். மேலதிகமான ஒவ்வோர்சொல்லுக்கும் மேற்கொண்டு 5 சதம்.

உள்நாட்டு அவசரதந்திக்கு முதற் பத்துவார்த்தைகளுக்கு 1 ரூபா 50 சதம். மேலதிகமான ஒவ்வோர்சொல்லுக்கும் மேற்கொண்டு 10 சதம்.

றேடியோசெற்றுகளுக்கு லைசென்ஸ் சலார் வருடம்ஒன்றுக்குப் 15 ரூபா. போஸ்காட்சலாரும், பத்திரிகைத்தபாற்சலாரும், ஆகாயத்தபாற்சலாரும் யாதுமாற்றமுமின்றியே முன்போலஇருந்துவரும்.

# யாசகன் பெற்ற கணையாழி

லண்டன்மாநகரிலே "வெஸ்ற்மினிஸ்றர் அபே" எனப்படும் புறொட்டஸ்தாந்த ஆலயத்திலே எலிசபேத்மகாராணியார் முடிசூட்டப்படும்போது அவர் தரிக்கவிருந்த முடிகள், தாங்கவிருக்கும் செங்கோல்கள், அணியவிருக்கும் அலங்காரஉடைகளைப் பற்றி அப்போதுபலரும் அதிகமாகப் பேசிக்கொண்டார்கள். அந்தமுடிகளில் ஒன்று, அர்ச். எட்வாட்டின் முடியாகும். முடிசூட்டப்பெற்றபோது இராணியார் அணிந்திருந்த மோதிரம் அர்ச். எட்வாட்டுடையதாகும். இந்த மோதிரத்தைப்பற்றிய சம்பவம் பெரிதும் ஆச்சரியமானது.

மிகவிசேஷப்பட்ட தங்கள் சொந்த அர்ச்சியசிஷ்டர்கள் என்று ஆங்கிலகத்தோலிக்கமக்கள் அருமைபெருமை பாராட்டுவாருள் அர்ச். எட்வாட்டும் ஒருவர். ஏனெனில், இற்றைக்குத் தொளாயிர வருடங்களுக்கு முன் அவர் இங்கிலாந்தின் சரித்திரப்பெருமைவாய்ந்த அரசராக விளங்கியிருந்தார். ஆம், அர்ச். எட்வாட்டைப் போலும் அரசர்ஒருவரைக் கொண்டிருப்பது அவர்கள்பெற்றுள்ள ஓர் பெரும அதிர்ஷ்டமேயாகும். இங்கிலாந்தின் அரசராகவேயிருந்த மற்றும் ஓர் அர்ச். எட்வாட் இருக்கின்றார். எட்மன்ட் அரசரும் ஓர்அர்ச்சியசிஷ்டராய் இருந்தார். ஆனால், இப்போது நாம் கூறுவது, ஸ்துதியரான அர்ச். எட்வாட்அரசரைப்பற்றியேயாம். இவர் வெற்றியாளரான வில்லியம் மன்னருக்கு நேர்முன்னதாக இங்கிலாந்தின் அரசராகவிருந்து 1066-ம் ஆண்டு பரமபதமடைந்தார்.

ஓர்நாள் இவர் தமதுபரிவாரசமேதராய் எசெக்ஸ்நாட்டைச் சேர்ந்த ஹாவெறிங்என்னும்இடத்தினூடாகக் குதிரையிற்சென்றுகொண்டிருந்தபோது அங்குநவமாகக் கட்டப்பெற்ற ஆலயமானது அன்றுதினமே சுவிசேஷகரான அர்ச். அருளப்பர் பேரால் பிரதிஷ்டைசெய்யப்படுகிறதெனக் கேள்விப்பட்டார். அர்ச். அருளப்பரிலே அரசர்மிகவும்பக்தியுடையராய் இருந்தமையாலே அவர் தமது பரிவாரத்தினருடன் பிரயாணத்தை நிறுத்திவிட்டுத் திவ்வியபூசை காண்பதற்காக அப்புதிய ஆலயத்துள் பிரவேசித்தார்.

பின்னர் திவ்வியபூசை முடிந்து ஆலயத்தைவிட்டு அவர்கள் வெளியேவந்தபோது அதன் வெளிவாயிலண்டை ஓர் பிச்சைக்காரனைக் கண்டார்கள். அப்போதுஅவன் அர்ச். அருளப்பரில் கொண்டுள்ள நேசத்தின்பேரால் தனக்கு ஏதும் கொஞ்சம் தருமம்கொடுக்கும்படியாக அரசரைவேண்டினான். அவர் உடனே தமதுசட்டைச் சாக்குகளில் கைகளைவைத்துப் பார்த்தார். ஆனால், அவைகள் வெறுமையாயிருந்தன. "ஒரு பென்னிதானும் என்னிடம்இல்லாததையிட்டு எனக்குப்பெருந் துக்கமாயிருக்கிறது" எனக் கூறிவிட்டு, அத்துணை அதிகம் ஏழையாயிருந்த அந்தப்பிச்சைக்காரனைப் பரிதாபத்தோடுநோக்கினார். பிறகுசட்டெனத் தமது விரலிலிருந்த பாரமான கணையாழியை அந்தப்படியே கழற்றியெடுத்து அந்தயாசகன்கையில் கொடுத்து அன்புபெருக, "இதோ பெற்றுக்கொள்; இதைவிற்றால் நீ நெடுங்காலம் சீவனம்பண்ணுவதற்குப் போதிய பெருந்தொகைப்பணத்தை அதுஉனக்குக் கொண்டுவரும்" எனப்பகர்ந்தார். யாசகன்அரசரைவணங்கி அவருக்குமிகுந்த நன்றிகூறினான். அதன்மேல் அரசர் தமதுபரிவாரத்துடன் குதிரையிலேறி அப்பாற்சென்றார்.

யாசகனுக்குஉபகரித்த தமது மோதிரத்திலே அரசர் எவ்வளவோஅதிகம் விருப்பங்கொண்டவராய் அதனை மிகவும்அருமையாகப் பேணிவைத்திருந்தார். அது மிகப்பாரமுடையதாய்ச் சுத்ததங்கத்தாற்செய்து விலையேறப்பெற்ற ஓர்நீலக்கல் பதிக்கப்பட்டிருந்தது. அந்த நீலக்கல்லின்மீது விலையுயர்ந்த மாணிக்கக்கற்கள் கொண்டு செய்த ஓர்சிலுவைஇருந்தது.

ஆனால், எட்வாட்அரசர் யாது எண்ணினார்? "எனது பிரிய அர்ச்சியசிஷ்டரான அர்ச். அருளப்பரில் நான் கொண்டுள்ள நேசத்தைமுன்னிட்டு அவன் என்னிடம் தருமங்கேட்டடன்; அர்ச். அருளப்பரில் கொண்டுள்ள நேசத்தின் பேரால் வேறொன்றையும் நான் அவனுக்குக் கொடுக்கமுடியாமல் இருந்தேன்" என்று எண்ணிக் கொண்டார்.

— ஜே. ஜெகநாதன் —

இச்சம்பவம்நிகழ்ந்து சிலவருடங்கள் சென்றன. இருஆங்கில யாத்திரிகர்கள் திருஸ்தலங்களைத் தரிசிப்பதற்கென்று பலஸ்தீனசென்றிருந்து ஒருநாள் அங்குவழியைத்தப்பவிட்டு அலைந்துகொண்டிருந்தார்கள். பொழுது அஸ்தமனமாகி இருள்பரவியதும் ஓர்அந்நியநாட்டில் தாங்கள் அந்தரிக்க நேர்ந்ததையிட்டும், இரவுநித்திரைசெய்ய இடமில்லாதிருப்பதையிட்டும் வெகுவாகப்பயந்து கலங்கினார்கள். அப்போதுஅவர்கள் திடீரென லாந்தர் வெளிச்சம்ஒன்று தங்களைநோக்கி எதிரேவரக்கண்டு, சற்றே தாமதித்துநின்று: இங்கே நாங்கள் நித்திரைசெய்யக்கூடியஇடம் எங்காவது இருப்பது உனக்குத்தெரியுமா? என்று லாந்தர் கொண்டுவந்த அம்மனிதரிடம் கேட்டார்கள்.

அப்போது அந்த மனிதர் "என்னுடன் வாருங்கள்" என்று சொல்லி, ஓர்சிறியவீட்டுக்கு அவர்களை அழைத்துச் சென்று இராப்போசனமும், படுக்கைகளும் உதவினார். மறுநாள் பொழுது விடிந்ததும் காலைப்போசனம் முடிந்தபிறகு அவர் ஜெருசலேமுக்குப் போகும்பாதையை அவர்களுக்குக் காண்பித்தார். "நல்லது, வரப்போகிறோம்; தாம் அத்துணைபட்சமாயும், உபகாரமாயுமிருந்ததையிட்டுக் கடவுள் தம்மைஆசீர்வதிப்பாராக; நாங்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)



# கத்தோலிக்க சமாச்சாரம்

## இரத்தஞ்சிந்தத் தயார்

இரும்புத்திரைக்குப் பின்னுள்ள நாடுகளில் இன்னுமே சுதந்திரத்தோடு வாழுகின்ற ஒரேயொரு கருதினாலும், போலாந்தின் திருச்சபை அதிபருமான கருதினால்விசின்ஸ்கிஆண்டவர் சமீபத்திலே வாஷோநகரில் திவ்வியநற்கருணைத் திருநாளைப்பற்றி உத்தண்டத்துடன் செய்தருளிய பிரசங்கத்திலே— போலாந்தில் கத்தோலிக்கதிருச்சபையை அடக்கியொடுக்குவான் கம்யூனிஸ்தஅரசாங்கம் கங்கணங்கட்டியெழுந்து செய்துவருகின்ற தகாதபிரயத்தனங்களைச் சண்டவேகத்துடன் கண்டனஞ்செய்து, திருச்சபையைப் பாதுகாப்பதிலே தங்கள்குருதியைச்சிந்துவதற்குப் போலிஷ் அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரின் அதிகாரபீடத்தைச்சேர்ந்த சகலரும் தயாராயிருக்கிறார்களென அறைகூவிநின்றார். குருமாருக்கும், அவர்களதுஞானமக்களுக்குமிடையே — மேற்றிராணிமார்களுக்கும், அவர்களது குருமாருக்குமிடையே நுழைந்து எதிரிடைபண்ண அரசாங்கஞ்செய்த பிரயத்தனங்களைத் திருச்சபை எங்ஙனம் பலநூற்றாண்டுகளாக எதிர்த்துப்போராடிய தென்பதைக் கருதினால்ஆண்டவர் அவ்வமயம் ஞாபகத்துக்குக் கொணர்ந்து — "அவசியமெனக்காணுமிடத்துத் தங்கள் குருதிகொண்டு சாட்சிகளாகும் வரையிலே போலிஷ் அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் இந்த முன்மாதிரியைப் பின்பற்றுவார்கள்; ஏனெனில், மற்றப்படி திருச்சபை கத்தோலிக்கமாயிருக்கமாட்டாது; நம்முடைய இரண்டாவதுதாய்நாடு ரோமை; ஏனெனில், ரோமையில்தான் நமது முதற்குரவர்— யேசுக்கிறீஸ்துநாதரின் அதிகாரத்தைப் பெறுகிறவர்— நமது அதிசிரேஷ்ட தலைவர் இருந்துவருகின்றார்" என்றும் கருதினால் விசின்ஸ்கி ஆண்டவர் கூறிநின்றார்.

## யூதகுருதம்பதிகளும் சுவாமியாரும்

அமெரிக்கஐக்கியதேச கிளிவ்லன்ட்நகரிலுள்ள பாத்திமா மாதாகோவிலின் உதவிக்குரவரான வண. ஹியுபோட்சுவாமியார் சமீபத்திலே ஓர்நாள் தமது தாயாரைச் சந்திப்பதற்கென்று ஆர்க்கோன்நகர் வீதிவழியே தமதுகாரைச் செலுத்திச் சென்றபோது, ஓர்பள்ளத்தில் கார்ஒன்று புரண்டுபோய்க் கிடப்பதைக்கண்டார். உடனே அவர் தமதுகாரை நிறுத்திவிட்டுப் புரண்டுபோயிருந்த காருள் அகப்பட்டுக்கிடந்த ஓர் மனிதரையும், அவர்மனைவியையும்விடுவித்து வெளியேற்றினார். அப்போது அந்தமனிதர் ஸ்கூர்என்னும் யூதகுரு தானேயென்று சுவாமியாருக்குத் தன்னை அறிமுகப்படுத்தினார். தனதுகார் பனிக்கட்டியிற்சறுகி ஓர்பக்கமாகப் பாய்ந்து தம்பம்ஒன்றில் மோதிப்புரண்டதாகத் தெரிவித்தார். சுவாமியார் தாமதமில்லாது அந்தயூத குருவையும், அவர்மனைவியையும் தமதுகாரில் ஏற்றி அநேகமைல் தூரத்திற்கப்பாலிருந்த ஓர் ஆஸ்பத்திரி கொண்டுபோய்ச் சேர்த்தார். அவர்களுக்கு ஏற்பட்ட காயம் அதிகம் கடுமையல்லவென்று அறிகிறவரையில் அங்குகாத்துநின்றார். பின்னர் இருவருக்கும் காயங்கள் கட்டப்படுகிறவரையில் தாமதித்திருந்து இருவரையும் தமதுகாரில் ஏற்றிப்போய் அவர்களது மனையில் விட்டுத் திரும்பினார். இந்தவிபத்து நிகழ்ந்தது அன்று பிற்பகல் 3 மணிக்காகும். அவர்களை வீட்டில் அவர்விட்டுப்போகும்போது இரவு 8 மணியாகும். அதனால்சுவாமியார் தம்முடைய தாயாரைச் சந்தித்துக்கொள்ள நேரமில்லாதவராய்த் தெலிபோன்மூலமாகவே சந்தித்துக் கொண்டார். வண. போட்சுவாமியாரின் பிறர்சிநேகத்தொண்டால் பெரிதும் மனவருட்சிகொண்டயூதகுரு இந்தச்சம்பவ முழுவதையும்எழுதித் தினசரிப் பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கின்றார்.

## பாத்திமாவின் வேதமாட்சி

பாத்திமாபதியிலே தற்போது இருந்துவருகின்ற பெண்மணிகளுக்குரிய வேறுவேறான 13 சபைமடங்களுடனும், ஆடவர்களுக்குரிய வேறுவேறான 2 சபைமடங்களுடனும் மற்றும்அநேக சந்நியாச, கன்னிகாசபைகள் தத்தம்மடங்களை அங்கேஅமைத்துவருகின்றன. அதனால் பாத்திமாவிரைவிலே சந்நியாச— கன்னிகாசபைகளின் நகரமாகத்திகழும்போல் இருக்கிறது. அங்குபுதிதாக அமைக்கப்படும் கட்டடங்களிலே, திவ்வியவார்த்தையானவர்சபைக் குருமாரது இருநூறுஅறைகளைக் கொண்ட கல்லூரியும், விடுதியும் அடங்கும். பாத்திமாவின்செய்தியைச் செபமாலைமூலம் பரப்புவதற்கும், கம்யூனிஸத்தின் செல்வாக்கை ஒழிப்பதற்குமாக அமெரிக்கஐக்கியதேசத்திலே அடியிடப்பட்ட சர்வதேசநீலச்சேனையால் அங்குள்ள மகாலயத்தை யடுத்துப் பின்புறமாகப் பெரும் விஸ்தீரணமானநிலம் வாங்கப்பட்டிருக்கிறது. இந்தக்காணியிலே 60 அறைகளைக்கொண்ட ஓர்ஞான ஒடுக்கமடம் அமைக்கப்பட்டுவருகிறது. இது நீலச்சேனையின் சர்வதேச தலைமைஸ்தானமாயும் இருந்துவரும். ருஷியாவில் பிறந்தவரும், ரோமாபுரியிலுள்ள ருஷியகுருமடத்தில் படித்தவருமான வண. பேவெல்சுவாமியார் பாத்திமாவிலுள்ள நீலச்சேனைக் கோவில் விசாரணைக்குரவராக நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றார்.

### சந்தானுள்மாதா திருநாள் வலித்தூண்டல்

இத்திருநாள் இம்மாதம் 20-ந் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி அடுத்த 26-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பாடற்பூசை, சுற்றுப்பிரகாரத்துடன் முடிவாகும்.

கோவில்வளவில் 'அர்ச். அன்னம்மாளின் பேரில்பத்திமுயற்சி' என்னும் சிறுபுஸ்தகம் விற்கப்படும். சந்தானுள் மாதாவின்படங்களும் விற்கப்படும்.

## ஆடி மாதம்

போதுக் கருத்து :— தனிமனிதனுக்குரிய மதிப்பை யாவரும் எங்கும் வழங்கும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன் கருத்து :— உண்மையைப் பரப்புவதற்கு அச்சியந்திரம், றேடியோ, சினிமா உதவும்படியாக மன்றாடுவது.

### திருநாள அட்டவணை

ஆடிமாதம் — 1953

| | | | |
|---|---|---|---|
| வெ | 17 | அ. அலெக்சியார், து. | (வெ) |
| சனி | 18 | அ. கமிலப்பர், த. | (வெ) |
| ஞா | 19 | இஸ்பிரீத்து ஆகம. பின் 8-ம் ஞாயிறு — அ. வின்சேந்தியு த பாவிலு, கு. | (ப) |
| திங் | 20 | அ. எரோணிமு எமலியார், த. | (வெ) |
| செ | 21 | அ. பிறக்சேதம்மாள், க. | (வெ) |
| புத | 22 | அ. மரியமதலேனம்மாள் | (வெ) |
| வி | 23 | அ. அப்பொல்லினர், மே. வே. | (சி) |

சத்தியவேத
பாதுகாவலன்
1953-ம் ஆண்டு
ஆடி மாதம் 16-ந் திகதி

## முதல் அணுக்குண்டு

சோவியற்ருஷியாவின் சர்வாதிகாரியாக விளங்கியிருந்த தோழர் ஸ்ராலினின் ஆயுளும், அவரது கொடுங்கோலாட்சியும் சென்ற பங்குனியிலே இறுதிகண்டபோது, தனியரசு நடாத்திவந்த அவரிடமாக ஜோர்ஜியா மலென்கவ் என்பவர் பிரதமமந்திரியாகவும், வியாச்செஸ்லியா மொலற்றவ் என்பவர் வெளிநாட்டு மந்திரியாகவும், லாவ்றென்றி பேறியா என்பவர் உள்நாட்டுமந்திரியாகவும் முப்பெருந் தலைவர்களாக—பிரதம அரசியற் தலைவர்களாகப் பதவியேற்றுச் சோவியற் ஆட்சிப்பீடத்தில அமர்ந்தனர். இவர்களது ஆட்சிவிஷயமாய் அமெரிக்க வெளிநாட்டு மந்திரியாரான திரு. ஜோண் டல்லெஸ் அப்போது தெரிவித்த அபிப்பிராயத்திலே—“இப்பொழுது ஸ்ராலினின் சகாப்தம் அஸ்தமித்துவிட்டது; ஆனல், அவருக்குள்ளமதிப்பும், செல்வாக்கும் அவருக்குப்பின் ஆதிக்கத்திற்கு வருகிறவர்களுக்கு ஏற்படப்போவதில்லை. அவருக்குப்பின் பதவியேற்றிருப்பவர்கள் அவரைப்போல உலகசமாதானத்துக்கு முட்டுக்கட்டைபோட முடியாது' எனக் கூறியிருந்தார்.

நிற்க, இத்தலைவர்கள் மூவரும் சோவியற் ஆட்சிப்பீடத்தமர்ந்து மூவிருமாசங்கள் இன்னும் முடிவாகவில்லை. அந்தோ! அவர்களில் ஒருவரான — உள்நாட்டுமந்திரியாரான லாவ்றென்றி பேறியா என்பவர் சோவியற் கம்யூனிஸ்த கட்சியிலிருந்து தள்ளப்பட்டு—பொதுசனவிரோதியாகக் கொள்ளப்பட்டு — கிறிமினல் குற்றவாளியாக ஆக்கப்பட்டு—அதிகாரபதவியிலிருந்து அகற்றப்பட்டு இன்று ஓர்சிறைக்கைதியாகி விட்டார். சோவியற்ருஷிய மந்திரிமார் சபையின் முதலாவது உபதலைவராய், அதன் உள்நாட்டு மந்திரியாராய் இருந்துவந்த திரு. பேறியா அவர்கள் சோவியற்அரசாங்கத்திலே தலைமைப்பதவி வகிக்கத் தந்திரமாக வழிவகைதேடியும், கம்யூனிஸ்தகட்சிக்கும், அரசாங்கத்துக்கும்மேலாக உள்நாட்டு மந்திரிகாரியாலயத்தை உயர்த்த வகைதேடியும் ருஷியாவின் உள்நாட்டுப்பாதுகாப்பை அத்துணை நெடுங்காலமாகத் தனது ஆதிக்கத்தில் கொண்டிருந்த தந்திரியென்றும், பிறநாட்டு முதலினநயங்கருதிச் சோவியற் அரசாங்கத்தை வஞ்சனையாற் கெடுப்பதை நோக்கமாகக் கொண்டு கட்சி விரோதமும், அரசாங்க விரோதமுமான செயல்களில் இறங்கியசண்டாளியென்றும், இன்னனபல புகழ்மாலைகளும் சோவியற் பத்திரிகைகளாலும், தலைவர்களாலும் இவருக்குச் சூட்டப்பட்டிருக்கின்றன. அம்மட்டா! ஓர் கிறிமினல்குற்றவாளியாகச் சோவியற் சுப்பிறீங்கோடு இவரை விசாரணைசெய்ய விருக்கிறதெனில் பின்னர் பேசுவானேன்?

தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினைவிதைத்தவன் வினைஅறுப்பான். சோவியற்அரசாங்கத்திலே இரண்டாவது தலைமைப்பதவி வகித்திருந்து, இன்று அதன்பரம சத்துராதியான இந்தப்பேறியாவும் ஸ்ராலினைப் போலவே ஜோர்ஜியாநாட்டைச் சேர்ந்தவர். ஓர் பையனுயிருந்தபோது ஸ்ராலின்சேர்ந்திருந்த அதே குருமடத்திலேயே இவரும் சேர்ந்துபடித்தவர். ஆனல் பிந்தக் கம்யூனிஸ்தவேதாளம் பற்றிக்கொள்ளவே, அதனல் அநியாயமாக இரத்தஞ்சிந்தப்பெற்ற கோடிக்கணக்கான மக்களின் இரத்தப்பழி இன்றுஇவரையுஞ் சூழ்ந்துவிட்டது. இவர் கதி யாதாயிருந்த போதிலும், இன்றைய சோவியற்ஆட்சிக்கு இவர் பரமவிரோதியா யிருந்தாரென்பது நிச்சயம். ருஷியாவிலும், அதன் தோழநாடுகளிலும் சமீபகாலத்தில் நடைபெற்றுள்ள விபரீதசம்பவங்களாலே சோவியற்தலைவர்கள் தமது கொள்கையில் சிலமாற்றஞ் செய்து இளக்காரங்கள் காண்பிக்கவேண்டிய அவசியநிலைமை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, ஹங்கேரியிலும், கிழக்கு ஜேர்மனியிலும் நடந்துள்ளவைகளை எடுத்துக்கூறலாம். இந்தமாற்றங்கள், இளக்காரங்கள் பேறியாவுக்குப் பிடிக்கவில்லை. ஆதலால் அவற்றிற்கெல்லாம் முழுவிரோதியாய், முட்டுக்கட்டையாய் இவர்நின்றாரெனத் தற்போது விளங்கக்கிடக்கிறது. அதனல் இவரைச் சிறையில் போட்டு ஒதுக்கிவிட்டுச் சோவியற்தலைவர்கள் தமது புதிய கொள்கையை மேற்கொண்டு புதியஆட்சிமுறையில் இறங்கியிருக்கின்றார்கள். அதனல் பேறியாவின்வீழ்ச்சி ஓர்அரசியல் இயக்கமேயாகுமன்றி அதிகாரமேம்பாடு அடைதற்கான ஓர்தனிப்போராட்டத்தின் முடிபன்று. இதிலிருந்து இரும்புத்திரைக்குப்பின்னல் அடிமையாட்சி ஓரளவில்நீங்கி அதிகமானசுதந்திரங்கள் அருளுதற்கான வழிவகைகள் கையாடப்பெற்று, பிரித்தானி, அமெரிக்க ஐக்கியதேசம், பிரான்ஸ் ஆதியாம் மேலைத்தேச உலகுடன் சோவியற்அரசு சமாதானஞ் செய்துகொள்ளும்படியாக அதிகமான சமரசஉணர்ச்சிகளுக்கு வழிகள் திறக்கப்படுமென்பது புலனைகின்றது. இவ்விதம் கம்யூனிஸ்தகொள்கையில் ஏற்படும் மாற்றமானது, ஆணையின் செயல்போன்று சோவியற் அரசு கம்யூனிஸத்தின் அழிவுக்குத் தானைகவேவீசும முதலாவது அணுக்குண்டாகுமென்க.

### இஸ்பிரீ. ஆகமனத்தின் பின் 8-ம் ஞாயிறு

#### சுவிசேஷ வாசிப்பு

(லூக். 16 : 1—9)

அர்ச். லூக்கா எழுதிவைத்தபடி பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி :— அந்தக்காலத்திலே யேசுநாதர் தமமுடைய சீஷர்களுக்குத் திருவுளமபற்றினதாவது : ஐசுவரியவானுகிய ஒரு மனிதனுக்கு ஒரு காரியஸ்தனிருந்தான். அவன் தன் எசமானுடைய ஆஸ்தியைச் சிதறடித்ததாக எசமானிடத்தில் அவனைக் குறித்து அவதூறு சொல்லப்பட்டது. ஆகையால், எசமான் அவனை வரவழைத்து, அவனை நோக்கி: உன்னைக் குறித்து இப்படி நான் கேள்விப்படுகிறதென்ன? உன் விசாரிப்பின் கணக்கை ஒப்புவி; நீ இனி என் காரியஸ்தனுயிருக்கக்கூடாது என்றான். காரியஸ்தன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது : நான் என்ன செய்வேன்! என் எசமான் விசாரணை வேலையினின்று என்னை நீககுகிறனே. மண் வெட்டவும் எனக்குச் சக்தியில்லை. பிச்சை யெடுக்கவும் வெட்கமாயிருக்கிறது. ஆகையால், நான் காரியஸ்த வேலையினின்று தள்ளப்படும்போது, சிலர் என்னைத் தங்கள் வீட்டில் ஏற்றுக்கொள்ளும்படி நான் செய்யவேண்டியது இன்னதென்று அறிவேன் என்று சொல்லிக்கொண்டு, தன் எசமானிடத்தில் கடன் பட்டவர்களை ஒவ்வொருவரை வரவழைத்து, முதலாவது வந்தவனைப் பார்த்து: நீ என் எசமானிடத்தில் பட்ட கடன் எவ்வளவு என, அவன் : நூறு குடம் எண்ணெய் என்றான். அப்பொழுது அவன் : நீ உன் சீட்டை வாங்கி, உடனே உட்கார்ந்து, ஐம்பது என எழுது என்றான். அப்பால் அவன் வேறொருவனை நோக்கி: உன் கடன் எவ்வளவு என, அவன் : நூறு கலம் கோதுமை என்றான். அதற்குக் காரியஸ்தன் : நீ உன் சீட்டை வாங்கி எண்பதென எழுது என்றான். அந்த அநீத காரியஸ்தன் விவேகமாய்ச் செய்துகொண்டதைப் பற்றி எசமான் அவனை மெச்சிக்கொண்டான். ஏனெனில், இப்பிரபஞ்சத்தின் மக்கள் ஒளியின் மக்களைக் காட்டிலும் தங்கள் சந்ததியிலே அதிக விவேகமுள்ளவர்களா யிருக்கிறார்கள். ஆகையால், நான் உங்களுக்குச் சொல்லுகறேன் : நீங்கள் மரணமடையும்போது உங்களை நித்திய கூடாரங்களில் ஏற்றுக்கொள்ளும்பொருட்டு அநீதப் பொருட்களைக்கொண்டு உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள் என்று திருவுளம் பற்றினர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.



நமது யாழ்ப்பாண மேற்றிராணியாராகிய மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்கள் திருநாமங்கொண்ட பெருநாள் நிகழும் ஆடிமாதம் 20-ந் திகதியாகிய அடுத்த திங்கட்கிழமை வருகின்றது என்பதை அவரது ஞானமக்கள் அனைவருக்கும் ஞாபகமூட்டுகின்றோம். அன்றுதினம் சகலரும்—விசேஷமாகப் பாடசாலைப் பிள்ளைகள்—தமது கருத்துக்காக, அதாவது — தமது மேற்றிராசனத்தைச்சேர்ந்த எந்தஒருகத்தோலிக்க பிள்ளைதானும் கத்தோலிக்க பாடசாலையைத் தவிர வேறெந்தப் பாடசாலைக்கும் போகாதிருக்கும்படியாய்ச் சகல வசதிகளுஞ்செய்து சர்வேசுரன் அருள்பாலிக்க வேண்டுமென்ற கருத்துக்காக —பத்திபற்றுதலுடன் மன்றாட வேண்டுமென்று ஆண்டவர் அவர்கள் ஆசிக்கின்றார்கள். இந்தக்கருத்து இலகுவில் அனுகூலமாகி அவர் சுகபலத்துடனும், தீர்க்காயுசுடனும், சிறந்த ஞானத்துடனும் தமது ஞானமந்தையைச் சிறப்பாக ஆண்டுவரத் தக்கதாகத் தெரியலான திருவருட்பிரசாதங்களையெல்லாம் மழைபோல அவர் மேல்பொழிந்தருளுமாறு இறைவன் திருவடிகளை இரந்துகொள்ளுகிறோம்.

## எனது பூசைப் புத்தகம்

வெளிவந்து விட்டது!
மருதமடுத் திருப்பதியிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

கிளேஸ்பேப்பர் ரூபா 5-00
பைபிள்பேப்பர் ரூபா 5-75

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர்
அச்சியந்திரசாலே,
யாழ்ப்பாணம்.


அர்ச். சூசையப்பர் கல்லூரிக்

## கழக விளையாட்டுப் போட்டி

அனுராதபுரி

அனுராதபுரி, அர்ச். சூசையப்பர்கல்லூரிக் கழகவிளையாட்டுப்போட்டியைக் காணி அபிவிருத்திமந்திரியார் P. B. புளாங்குளம திசாவஅவர்கள் ஆரம்பித்துவைத்தபோது, கல்லூரித்தலேவர் வண. F. J. ஸ்ரனிஸ்லாஸ், O. M. I., B. A. (London) சுவாமிஅவர்கள்:

"இக்கல்லூரிச் சரித்திரத்திலே முதல்தடவையாக — ஏன் வடமத்திய மாகாணத்தில் முதல்முறையாகஎன்று கூறக்கூடியதாய்ப் பிரமாண்டமான ஓர்அளவில் இவ்விளையாட்டுப் போட்டித் திட்டம் அமைத்துநடத்தப் பட்டதையிட்டும், இன்னும் விசேஷமாக இதேகல்லூரிப் பழையமாணவர்ஒருவரால இது ஆரம்பித்துவைக்கப் பட்டதையிட்டும் நாம மகிழ்ச்சியடைகிறோம்" என்றுகூறி மந்திரியவர்களை வரவேற்றுநின்ருர்.

ஆரம்பவிழாச் சிற்றுரையிலே மந்திரியார் பேசியபோது: "இக்கல்லூரி ஒருமந்திரியையும், பாராளுமன்ற அங்கத்தினர்பலரையும, மற்றும்பல சிவில் உத்தியோகஸ்தரையும அளித்துள்ளதையிட்டும், நானும இக்கல்லூரிப் பழையமாணவனய் இருப்பதையிட்டும் பெருமையடைகிறேன" எனக் கூறி நின்ருர்.

வருடாந்த கழகவிளையாட்டுப் போட்டி முற்றவெளிப பொதுமைதானத்தில நிகழுமஆடிமாதம 4-ந் திகதி நடைபெற்றது. இதிற்கலந்துகொண்டவரிடையே மிகவும் கடுமையான போட்டி நடைபெற்ற போதிலும் கடைசிவரை ஒழுங்குமுறை அனுசரிக்கப்பட்டமை ஆச்சரியமானதாகும். கியோமா கழகமே மிகவும் திறமை காட்டி 150 புள்ளிகள் ஈட்டியது. அடுத்ததாக எமிலியானுஸ்கழகம 114 புள்ளிகளும், யூலியன்கழகம் 86 புள்ளிகளும், பொஞ்சீன்கழகம 73 புள்ளிகளுமபெற்றன. எமிலியானுஸ்கழகத்தின பந்தமே மிகச்சிறந்ததாகக் காணப்பட்டது. கியோமர் கழகத்தவரான A. மகேந்திரன்என்பவரே போட்டியாளருள் சிறந்தவராகக் கணிக்கப்பட்டு வெள்ளிக்கிண்ணம் பரிசளிக்கப் பெற்ருர்.

போட்டியிறுதியில் திரு. L. H. இலங்காதிலக பெற்ருேர்சார்பாகவும், A. பங்கிராஸ் பழையமாணவர்சார்பாகவும், வண. G. T. பாலசுந்தரம்சுவாமியவர்கள் கல்லூரியின்சார்பாகவும் சொற்பொழிவுகள் ஆற்றினர். மைதானத்திலநடைபெற்ற ஒழுங்குமுறைகளை யாவரும் ஒருங்கே பாராட்டினர்.

மந்திரியவர்கள் தமதுசொற்பொழிவிலே கல்லூரித்தலேவரையும், உதவி ஆசிரியர்களையும், அவர் நிர்வாகத்திறமையையும், யாவரினதும்உற்சாகத்தையும் வியந்துகொண்டார். மேலும் அவர் கூறியதாவது: "இக்கல்லூரியே எனக்கு அரிச்சுவடிகற்பித்து நான்மந்திரிபதவிக்கு உயர்த்தப்பட வழிவகுத்தது; இதேவிளையாட்டுமைதானமே நான்வெற்றியையும், தோல்வியையும் சமமாகஏற்றுக்கொள்ளக் கற்பித்தது."

போட்டியாளர்கள்யாவரும் திறமையாகவும், ஒழுங்காகவும் போட்டிஅணிவகுப்பின்பின் அளித்த வாக்குப்படி நடந்தனர். தோல்வியையும அவர்கள் சந்தோஷமாக ஏற்றுநடந்தது, வடமத்தியமாகாணத்தில் ஏனையோரும் பின்பற்றத்தக்க ஒருமாதிரிப்போட்டியாக அதனைநடத்தினரெனில் மிகையாகாது. வெள்ளிக்கிண்ணப் பரிசளிப்புவிழாவுடனும், தலைமைஆசிரியர் திரு. S. A. மரியாம்பிள்ளை அவர்களின் சிற்றுரையுடனும் போட்டி இனிதேமுடிவுற்றது. போட்டி வெற்றிகரமாக நிறைவேறியதை மிகப்பெரியசனத்திரள் நிரூபித்தது. அனுராதபுரி, திருக்குடும்ப கன்னிகாமடம் தேநீர்விருந்துபசாரம் நடத்தி யாவரையும்மகிழ்வித்தது. கல்லூரித் தேகப்பயிற்சிப் போதகாசிரியர் A. J. பெனடிக்ற் அவர்கள்.

— நிருபர்

## யாசகன்பெற்ற கணையாழி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் பிறகுதமக்குக் கடிதம்எழுதத்தக்கதாய்த் தமதுபெயரைத் தயவுசெய்து தெரிவிக்குமாறு வேண்டுகிறோம்" என்று அவர்கள் பிரியாவிடை கூறும்போது கேட்டார்கள்.

அப்போது அவர் "நானே அர்ச் அருளப்பர்; நீங்கள் உங்கள்சொந்தநாடுபோய்ச் சேரும் போது, இங்கிலாந்தின் உங்கள் எட்வாட்அரசருக்கு என்னிட்மிருந்து ஓர்செய்திகொண்டுசெல்வீர்களா? ஆறுமாதகாலத்தில் அவர் மரணிப்பாரென்றும், அவரை அழைத்துக்கொண்டு போக நாமேவருவோமென்றும் அவருக்குச்சொல்லுங்கள்; நாம் மெய்யாகவே அர்ச். அருளப்பர் தானென்று அவருக்குஎண்பிக்கும்படியாய் ஓர்முறை ஹாவெறிங்எனுமிடத்திலே அவர் நமக்குத்தந்த இந்த மோதிரத்தை அவரிடம் கொடுத்துவிடுங்கள்" எனக்கூறினர்.

அவ்வாறே அர்ச். எட்வாட் அரசர் அத்தனை வருடங்கள் எல்லாவற்றுக்கும்பிறகு தமது மோதிரத்தைத் திரும்பப்பெற்றுக்கொண்டார். அதுமுதல் இரண்டாவது எலிசபேத் மகாராணியார்காலம் வரையிலே இங்கிலாந்தின் அரசர்கள், மகாராணிகள்சகலரும் அதனை உபயோகித்து வந்திருக்கின்ருர்கள்.

தேவதாயாரின் தாயாகிய

## சந்தாஞள்நாயகி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீ உனதுபுருஷனை இழந்த கைம்பெண்ணுய் இருக்கிருயா? உன்மனைவியைஇழந்து பிள்ளைகளைக்காப்பாற்ற உதவியிலலாத புருஷனுய்வாடுகிருயா? எவ்விதஏழைகளையும, விதவைகளையும தமது ஆதரவிலே அணைத்து வைத்துக்காப்பாற்றும் சந்தாஞள் மாதாவிடம் போ.

இவ்வுலகில் எப்படிப்பட்டவர்களும் உதவிசெய்தபிற்பாடு அவர்கள்மரணிக்கும்போது அவர்களுக்குச் சீவியத்தின்முடியை அவ பெற்றுத்தந்தருள மாட்டாவென்று எவர்தான் சந்தேகங் கொள்ளலாம்? ஆகவே, பூவுலகில் இப்படிப்பட்ட சுத்தவாளியை அவவுடையதிருநாளில் ஆடிமாதம் 26-ந் திகதியன்றுமாத்திரமல்ல எமது சீவியகாலம்முழுவதுமே பத்திசெய்து வாக்கடவோமாக!

## சந்தீயோகுமையோர் திருநாள்—கிளாலி

யாத்திரீகர்களுக்கோர் சிறந்தவசதி!
கூட்டுறவியக்கத்தின் குதூகல சேவை!!

கிளாலி சந்தியோகுமையோர் கோவிற்திருநாளுக்கென வருபவர்களுக்கு வசதிசெய்யும்பொருட்டுப் பளைக் கூட்டுறவுச்சமாசம் ஓர் கிளைப்பண்டகசாலையை 21-7-53 திங்கட்கிழமைதொடக்கம் கோவிலுக்குஅருகாமையில் அமைத்து நடத்தவிருக்கின்றது.

மலிந்தவிலையில் சிறந்த உணவுப்பொருட்களும், இன்னும் தேவையான சகலபொருட்களும் திருநாள் முடிபுவரையும் இக்கடையில் பெறுவதற்குவேண்டிய ஒழுங்குகள் செய்திருக்கிறோம்.

பளைக் கூட்டுறவுச்சமாசம்,
பளை.

க. பே. முத்தையா
காரியதரிசி



சதாசகாய
மாதாவின்
கோணம்

குழந்தையின்

## அற்புத ஆரோக்கியம்

1952-ம் அண்டு மார்கழிமாதம் 21-ந் திகதி காலே10மணிபோல எங்களை அறியாமல் தற்செயலாக எனதுமூன்ருங் குழந்தை லூசில்லா எங்களதையல் இயந்திரத்தின் நூனுழியை விழுங்கி விட்டது. அதை விழுங்கியவிஷயம் அப்போது எங்களுக்குத்தெரியாது.

பிள்ளை சத்தியெடுக்கத் தொடங்கியது. சாப்பாடுஒன்றும் உட்செல்ல முடியவில்லை. டக்றர்மாரிடங் கொண்டு போனேம். அவர்கள் கொழும்புப் பெரியஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகச் சொன்ஞர்கள். அங்கு "எக்ஸ்றே" படம் பிடித்துப்பார்த்தபோது தொண்டையின் இடப்புறத்தில் ஒருநூனுழி (Shuttle) பொறுத்திருக்கக் காணப பட்டது. எனவே, ஹவலொக்சிமாட்டியின ஆஸ்பத்திரியில் பிள்ளையைச்சேர்க்கும்படி சொன்ஞர்கள். 23-ந் திகதி பிள்ளையின்நிலைமை அவதானிக்கப்பட்டது. 24-ந் திகதி பிள்ளையைச சத்திரவைத்தியமேடைக்கு இட்டுச்சென்ருர்கள். வாயின்ஊடாக ஒருஆயுதத்தால் நூனுழியைஎடுக்க டக்றா தயமாலான பிரயாசைப்பட்டும் அவருடைய சிரமம்எல்லாம் வீணுய்ப் போய்விட்டது. தாமசெய்யக்கூடியது வேறென்றுமில்லையென்றும், தொண்டையிற் சத்திரவைத்தியஞ் செய்துதான் நூனுழியை எடுக்கலாமென்றும சொல்லிவிட்டார். அடுத்தநாளாகிய 25-ந் திகதி கிறிஸ்மஸ்எனும நத்தார்த்தினததன்று "ஒப்பறேஷன்" செய்வதாகக் கூறி டக்றர் சென்றுவிட்டார். பிள்ளை வாயால் இரதத்ம வடிந்தபடியே படுக்கைக்குத் திரும்பக்கொண்டுபோகப்பட்டது. ஒப்பறேஷன்என்ற சொல்லைக் கேட்டதே எனதுமனைவி பயப்பிராந்திகொண்டு, பிள்ளைக்குச் சேமோசம் வந்துவிடுமோஎன அங்கலாய்த்து, பரிசுத்தசதாசகாயமாதாவுக்கு ஒருநேர்த்திவைத்தா. பிள்ளை ஒப்பறேஷன்இல்லாது, இந்தஅபாயத்திலிருந்து காக்கப்பட்டால் பிள்ளையைக் கோவிலுக்குக் கொண்டுவந்து இரண்டுமாடப் புருக்களைக் காணிக்கைகொடுத்து, பிள்ளையின்கையால் மெழுகுவர்த்திகள் கொளுத்துவிப்பதாக நேர்ந்து கொண்டா.

நேர்த்திக்கடன் செய்த சற்று வேளைக்குப்பின் பிள்ளை இருமலுடன் ஓங்காளித்தது. முதல்ஓங்காளத்துடன் இரத்தம்வந்தது. இரண்டாம்முறை ஓங்காளித்ததும், ஒருவிததொந்தரவும், வில்லங்கமும் இல்லாது தையல்மெசின் நூனுழி வெளியேவந்தது. அப்போது நானும், என்மனைவியும், என்மாமியாரும், நேர்ஸ்மாரும், ஒரு டக்றரும் சமுகமாய் இருந்தோம். நாங்கள்எல்லோரும் அப்போதுஅடைந்த வியப்புக்கும், சந்தோஷத்துக்கும் அளவேயில்லை. டக்றர்கொண்ட அதிசயம் தான் எல்லாவற்றையும் வென்றுவிட்டதெனச் சொல்லலாம். சிலநாட்களால் பிள்ளைக்குப் பூரணசுகங்கிடைத்தது.

இவ்விதநன்மையை எங்களுக்குப்புரியச் சித்தங்கொண்ட எங்கள்அருமைத் தாயாருக்கு—சதாசகாய மாதாவுக்கு எங்கள்இருதயபூர்வமான நன்றியைச் செலுத்துகிறோம். அவவை வாழ்த்தி நமஸ்கரிக்கிறோம். அவவின்மேல் எல்லோரும் அன்பும், பத்தியும்வைத்து அவவின் உதவியைப்பெற்று அவவை எப்போதும் போற்றிப் புகழ்வார்களாக.

[கொழும்பு, கொட்டாஞ்சேனையில் இருக்கும J. B. மொருயஸ் என்பவர் "நோவனைப்புதினம்" எனும் ஆங்கில பத்திரிகைக்கு எழுதியனுப்பிய நன்றித் துதியின் சாரம்.]

அர்ச். வின்சென்ற் டீ போல்

## திருநாள்

இத்திருநாளை வருகிற 19-ந் திகதி ஞாயிறன்று அகில உலகிலுமுள்ள அர்ச். வின்செனற் டீ போல்சபையார் கொண்டாடுகிருர்கள்.

வருகிற ஞாயிற்றுக்கிழமை காலே 7-10 மணிக்கு ஆசனக்கோவிலில் நிறைவேறும் திவ்விய பூசையானது யாழ்ப்பாணத்திலுள்ள அர்ச். வின்செனற் டீபோல் சபையார்போால் ஒப்புக்கொடுக்கப்படும.

அத்தருணம் அவர்களிடம் உதவி பெறுவோரும, சகல அ. வி. போ. சபை அங்கத்தவர்களும் சமுகமாயிருந்து திவ்வியபூசைகண்டு திருவிருந்தருந்தும்படி ஏவபபடுகிருர்கள். மூன்று பூசைகளிலும் திருநாட்பிரசங்கமசெய்யப்படும்.


பின்னர்எலலாப்பந்திகளின் அங்கத்தவர்கட்கும் அர்ச். சூசையப்பர்கூட்ட மண்டபத்தில் சிற்றுண்டி உபசாரணை நடைபெறும.

P. Saverimuttu, M A.
தனிச்சங்க காரியதரிசி.

## ஆறயிராம்றுத்தல் கஞ்சா

கொழும்பிலே புறக்கோட்டைப் பகுதியில சென்ற ஞாயிற்றுக்கிழமை ஓர்இடத்தைப் பொலிசர் பரிசோதனை செய்தபோது அதிலே 12 லட்சம்ரூபா பெறுமதியான ஆருயிரம் ருத்தல் கஞ்சா மறைத்துவைத்திருக்கக் கண்டு பிடித்தனர். இந்தக்கஞ்சா இலங்கையில்செய்கைபணணப்படும் இனத்தைச் சேர்ந்தது. தற்போது இந்தியகஞ்சா கிடையாதிருப்பதாலே இலங்கைக்கஞ்சாவின்விலை வெகுவாக உயர்ந்திருப்பதாக அதிகாரிகள் கூறுகின்ருர்கள். வடபகுதியிலே விழிப்பான காவல் நடைபெறுவதால் இந்திய கஞ்சா இலங்கைக்குவருவது அரிதாகிவிட்டது.

சத்தியவேத பாதுகாவலன்



# பாலர் பக்கம்



## அண்ணா சொல்வது

அருமைச் சகோதரங்களே!

“முயற்சியாய் இருப்பவனை ஒரு பிசாசு சோதிக்கும்; சோம்பேறியை ஆயிரம் பிசாசுகள் சூழ்ந்து நிற்கும்’ என்று ஸ்பானியமூதுரை ஒன்று உண்டு. சும்மா இருக்கிறது ஒரு பென்னம் பெரிய சோதனைதான். ஏனெனில், எமது சத்துராதியின் தாக்குதலுக்கு நாம் வழியை அகலத் திறந்து விடுகிறோம்.

சோம்பல் ஆத்துமத்தின் ஆகப்பெரிய சத்துராதி. ஏனெனில், தனது வினையால் மனிதரின் ஆத்துமத்தை நஞ்சூட்டிக் கொல்லும் அபூர்வ தத்துவம் அதற்கு உண்டு. இந்தச் செத்த மனிதனின் “புண்ணிய” மாகிய சோம்பலில் அரோசிகமான அக்கிரமங்கள் முளைத்து வீறுகொள்ளுகின்றன. அது இஷ்டப் பிரசாத அந்தஸ்திலுள்ள ஆத்துமத்தின் வரங்களையும் பயனற்றனவாக்கி விடும்.

சோம்பேறி ஊக்கம், முன்னேற்றம் என்பனவற்றை அறியான். அவனுடைய சரீர, ஆத்தும தத்துவங்கள் யாவும் உளுத்துப்போய் விடுகின்றன. சீவியத்தில் முன்னேற்றமும், முதலிடமும் அடைய விரும்பும் எந்தமனிதனும் சோம்பலைத் தூராதி தூரத்தில் விலக்க வேண்டும். ஆமையும், முயலும் பந்தயம் பிடித்த கதை தெரியும் அல்லவா? உலகத்தில் உபயோகமான மனிதராய் விளங்க வேண்டுமாகில் சோம்பலைத் துஞ்சற விலக்க வேண்டும். முயற்சி இல்லாதவன் இகழ்ச்சி அடைவான். அதற்குப் பதிலாக உலகத்தில் பெரியமனிதராய் மதிக்கப்படுவோர் எல்லோரும் எப்போதும் ஊக்கம் நிறைந்தவர்கள். அவர்கள் மேன்மை அடைந்ததற்கு அதுவே காரணம்.

ஆகையால் நீங்கள் எப்போதும் முயற்சியாய் இருங்கள். அப்படி இருப்பதைக் கண்டால் பிசாசு தன்முயற்சி “உபயோகம் அற்றது” என்று உணர்ந்து விலகிவிடும். “சும்மா இருக்கிறவன் மாத்திரம் சோம்பேறி அல்ல; கூடிய திறமையாய் முயற்சிப்படாமல் விடுகிறவனும் சோம்பேறிதான்” என்பது சோக்கிரூதீஸ் ஞானியின் கூற்று. சோம்பல் சோதனையின் விளைநிலம். நரகத்திற்கு இலகுவான பாதை. சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணா

## சோம்பல் ஒழித்திடுவாய்

— I —

சோம்பல் ஒழித்திடுவாய் — குழந்தாய்!
சோர்வை அகற்றிடுவாய்
கூம்பும் மலர்அழகு — சுகந்தம்
கொண்டு விளங்கிடுமோ?

— II —

கோல மலர்களிலே — நறுந்தேன்
கூட்டிடும் வண்டினைப்போல்
காலமெலாம் முயன்று — அறிவுக்
கல்வி நிறைத்திடுவாய்.

— III —

ஊரும் எறும்பினைப்போல் — குழந்தாய்!
ஊக்கம் இருந்திடிலோ
சேருந் திரவியங்கள் — புகழும்
செல்வமும் வாழ்ந்திடலாம்.

— IV —

எத்தனை எத்தனையோ — தடவை
இன்னலுடன் முயன்று
சித்திரக் கூடமைக்கும் — சிலந்தி
செய்கையைக் கண்டுணர்வாய்

— V —

துள்ளு மறியினைப்போல் — குழந்தாய்!
துள்ளி எழுந்திடுவாய்
வள்ளுவன் பைங்குறள்போல் — புவிமேல்
வாழ்வு படைத்திடலாம்.

‘ஜெயம்’

## என்னைத் தெரியுமா?

1. வென்செஸ்லாஸ் அரசருடைய சமஸ்தான ஆத்தும குருவாக இருந்தேன். இராணி பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்திய இரகசியத்தைப் பரகசியப் படுத்தும்படி அரசன் ஆஞ்ஞாபித்தான். அப்படிச் செய்ய மறுத்ததினால் என்னை ஆற்றில் எறியும்படி அரசன் கட்டளையிட்டான். நான் யார்?

2. நான் சிறுமியாய் இருந்த காலத்தில் பரீஸ் பட்டணத்துக்குக் கிட்ட ஆடுமேய்த்துக் கொண்டிருந்தேன். பின்னர் பரீஸ்பட்டணத்தை ஹன்ஸ் என்னும் காட்டுமிராண்டிகள் அழித்து விடாமற் காத்தேன். குளோவிஸ் அரசனுக்கு மந்திரியாகவும் இருந்தேன். பரீஸின் பாதுகாவலராகச் சங்கிக்கப் படுகிறேன். என்பெயர் என்ன?

3. நான் சம்பாவிலுவின் சிநேகிதனும், சீஷனுமாய் இருந்தேன். அவருடைய போதகப் பிரயாணங்களில் அவருடன் கூடச் சென்றேன். நான் எபேசு நகரில் மேற்றிராணியாராய் இருந்தேன். சம்பாவிலு எனக்கு இரண்டு கடிதங்கள் எழுதினார். அவைகளில் என்னுடைய பெயர் உண்டு. அதைச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

4. நான் பிரான்சீஸ்குவின் சபைச் சந்நியாசி. குழந்தையேசு அடிக்கடி எனக்குத் தரிசனமானார். பதிதரின் “நித்திய சுத்தியல்” என்று அழைக்கப்பட்டேன். இழந்துபோனவைகளைக் கண்டடைய என் உதவியை நாடுகிறீர்கள். என்னைத் தெரியுமா?

விடை:

1. அர்ச். ஜோன் நெப்பொமுசேன்.
2. அர்ச். ஜெனெவியெவ்
3. அர்ச். திமோத்தெயு
4. அர்ச். அந்தோனியார்.

## ஞாயிற்றுக்கிழமைப் பூசை

அன்று ஞாயிற்றுக்கிழமை காலை அன்ரன் பூசைக்குப் போக உடுத்திக் கொண்டு தனது சிநேகிதன் நாயகம் வீட்டுக்குச் சென்றான். அவன் அப்போதும் கட்டிலில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவன் பெற்றோர் அவனை வெகு பிரயாசையுடன் எழுப்பினார்கள். கடைசியாக அவனும் எழுந்து உடுத்திக் கொண்டு அன்ரனுடன் புறப்பட்டான்.

இருவரும் செல்லும்போது சில கெட்ட சிநேகிதர் அவர்களை வழிமறித்துத் தங்களுடன் விளையாட வரும்படி கேட்டனர். அன்ரன் மறுத்துவிட்டுக் கோவிலுக்குச் சென்றான். ஆனால், நாயகம அவர்களுடன் நின்று விட்டான்.

பிறகு நாயகமும், சிநேகிதரும் ஓர் மாந்தோப்புக்குள் நுழைந்தனர். அத்தோப்புக் காவல்காரனும் பூசைக்குச் சென்றதால் அவர்கள் துணிவாக மாமரங்களில் ஏறிக் குதித்து மாங்காய்களைப் பறித்துத் தின்றார்கள். பின்னர் பூசை முடிந்து ஓர்கிழவன் தூரத்தில் வரக் கண்டதே நாயகத்தைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் குதித்து ஓடித் தப்பி விட்டனர். உச்சிக் கொப்பு ஒன்றில் இருந்த நாயகம் என்ன செய்வது என்று தெரியாது திகைத்தான். பயத்தால் அவன் உடல் நடுங்கியது. அதன் மேல் “தொப்” என்று ஓர் சத்தம் கேட்டது. நாயகம் அறிவற்று நிலத்தில் கிடக்கக் காணப் பட்டான்.

அவன் ஆஸ்பத்திரியில் காயங்களுடன் ஓர்கட்டிலில் படுத்துக் கிடந்தான். அவன் பக்கத்தில் அன்ரன் நின்றான். நாயகம் அன்ரனைப்பார்த்து: “நண்பா, அன்று நான் உன்னோடு பூசைக்கு வந்திருந்தால் எனக்கு இந்தக்கதி ஏற்பட்டிருக்குமா? ஞாயிற்றுக்கிழமைப் பூசையைஇழந்து பாவம் கட்டிக்கொண்டேன். அத்துடன் கள்வன் என்ற பட்டமும் வாங்கிக் கொண்டேன். கால்களிலே பெரும் காயங்களும் அடைந்தேன். ஞாயிற்றுக்கிழமைப் பூசையைத் தவறவிட்டு உண்டான பயன் இதுதான். எப்பொழுதும் நல்லவருடன் நட்புக் கொள்ள வேண்டும்” என்று கூறி அன்ரனை அணைத்து முத்தமிட்டான் நாயகம்.

வ. அ. புவிராசா
சில்லாலை.

## இயற்கையே! என்ன காட்டுகிறாய்?

1

நிறைமதி நீயும் அழகாக
நீல வானில் வருகையிலே
பொறைஅம லன்நற் கருணையிலே
பொதிந்த வடிவைக் காட்டுகிறாய்

2

குறைமதி நீயும் குவிவாகக்
குறைந்து வளரும் போதினிலே
மறைபணி தூய மரிபாதம்
வணங்கு வடிவைக் காட்டுகிறாய்

3

காலை உதிக்கும் சூரியனே
கதிரைச் சிந்தி வருகையில் நீ
மாலை கொடுத்த மாமரியின்
மங்கா அழகைக் காட்டுகிறாய்

4

கூண்டுக் கிளியே தனியாய் நீ
கூம்பி இருக்கும் போதினிலே
ஈண்டெம் இறைவன் தனியாக
இருக்கும் இடத்தைக் காட்டுகிறாய்

5

தப்பிய கன்றே நீவந்து
தாயைத் தேடி ஓடுகையில்
திப்பிய* தாயை வீடடைவோர்
தேடும் வகையைக் காட்டுகிறாய்

6

மழையே நீயும் துளியாக
வந்து பெருகி ஓடுவதில்
பிழையற மனிதன் துறையாக
இறைதரு வரமே காட்டுகிறாய்

7

ஏழு நிறத்தோ டழகாக
இலங்கும் வான வில்லேநீ
மாழுங் காலம் உலகுசலம்
கொள்ளா தென்றே காட்டுகிறாய்

8

வானம் தெரியும் வால்மீனே
வளர்ந்து நீயும் வீழ்கையிலே
தானம் இல்லாச் சண்டாளர்
தனத்தின் முடிவைக் காட்டுகிறாய்

9

மலரும் தாமரை மலரேநீ
மாலை வாடிக் குவிகையிலே
மலரும் மனிதன் ஒருகாலை
மடியும் வகையைக் காட்டுகிறாய்

10

பகலவன் ஏறி வருகையிலே
பையச் சுருங்கும் நிழலேநீ
இகலவர் எங்கள் பொறுமைமிக
இருக்கும் நிலையைக் காட்டுகிறாய்

* திவ்விய

(யுவன்—கரம்பன்)



## உங்களுக்குத் தெரியுமா?

**1.** 12-ம் பத்திநாத பாப்பாசர் தமது எத்தனையாவது ஆண்டு ஆட்சியைத் தற்போது நடத்திவருகிறார்?

15-வது வருட ஆட்சியை நடத்தி வருகின்றார். அவர் 1939-ம் ஆண்டு பங்குனிமாதம் 2-ந் திகதி பாப்பரசாகத் தெரியப்பட்டு, அம்மாதம் 12-ந் திகதியன்று முடிசூட்டப்பெற்றார்.

**2.** எந்தஆங்கிலேயமன்னர் ரோமாபுரியிலே நான்காவது சிங்கராயபாப்பானவரால் அபிஷேகஞ்செய்து முடிசூட்டப்பட்டார்?

அல்பேட்மன்னர்.

**3.** 12-ம் பத்திநாத பாப்பாசர் எப்போதாவது இங்கிலாந்து சென்றிருக்கிறாரா?

ஆம், அவர் ஓர் குருவானவராக இருந்தபோது 5-ம்ஜோர்ஜ் அரசரின் மகுடாபிஷேக வைபவத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பாப்பாசின் தூதுக்கோஷ்டியில ஒருவராக 1911-ம் ஆண்டு அங்குசென்றிருக்கிறார்.

**4.** தற்போது ஐரோப்பாவிலே மகாராணிகளாயிருந்து ஆட்சிநடத்துவார் எத்தனைபேர்?

இரண்டுபேர். (1) பிரித்தானியை ஆட்சிசெய்துவரும் இரண்டாவது எலிசபேத்மகாராணியார். (2) நெதர்லாந்தை (ஒல்லாந்து) ஆட்சிபுரிந்துவருகின்ற ஜூலியானா மகாராணியார்.

**5.** எதிர்காலத்திலே ஐரோப்பிய நாடுகளில் மற்றொன்றை ஆட்சிசெய்யும் உரிமையைப்பெற்றுள்ள இளவரசியார்?


தென்மார்க்நாட்டின் மார்கிறெத் இளவரசியே. அந்நாட்டினை ஆட்சிசெய்துவருகின்ற பிறெடெறிக் அரசருக்கும், அவரதுதேவியாருக்கும் புத்திரர்கள் இல்லை. மூன்றுபுத்திரிகளே இருக்கின்றனர். அதனால் அந்நாட்டின் அரசியல்திட்டப்படி அரசருக்குப்பின் சிம்மாசனமேறவேண்டியவர் அரசரின்சகோதரரான நூட்இளவரசரே. ஆனால், அந்நாட்டுமக்கள் சமீபத்திலே சிநேகபான்மையில் பொதுசனவாக்களித்து அரசருக்குப்பின் தங்களுக்கு அரசியேவேண்டுமெனத் தீர்மானித்துவிட்டார்கள். அதனால் அரசரின் மூத்தகுமாரத்தியாகிய மார்கிறெதிஇளவரசியே அரசருக்குப்பின் தென்மார்க்கின் மகாராணியாராகச் சிம்மாசனமேறவிருக்கின்றாள்.

**6.** உலகத்திலே இன்னமும் பாவனையில்இருந்துவரும் மிகப்பழைய நீராவிக்கப்பல் எது?

எஸ். எஸ். மலாறென்என்றசுவீடன் நாட்டுக் கப்பலேயாகும். இது 1848-ம் ஆண்டு கடலில்இறக்கப்பட்டுக் கடந்த 105 வருடங்களாகத் தொடர்ந்து பிரயாணம்நடத்திவருகின்றது.

**7.** பாண்டுநோய் எப்படி உண்டாகிறது?

இது கொளுக்கிப்புழுவினால் உண்டாகிறது. இப்புழு காலவழியாகத் தோலைத் துளைத்துக்கொண்டு இரத்த ஓட்டத்திற் கலந்து இருதயத்துக்கும், மூச்சுப்பைகளுக்குஞ்சென்று இறுதியில் சிறுகுடலை அடைகின்றது. இது சிறுகுடலின் சுவர்களில்கடித்து இரத்தத்தை உறிஞ்சுகின்றது. அங்கிருந்து அது முட்டைகளை இடுகிறது. முட்டைகள் மலத்தோடு வெளியேவந்து பொரித்துப் பெருகுகின்றன. பாண்டுநோய்பெருகாமல் தடுப்பதற்கு நாம் மலக்கூடங்களில் மலங்கழித்தல்வேண்டும். கண்ட இடங்களிலும் மலங்கழித்தல்கூடாது.



## நாளு சங்கதிகள்

— விசியேபதியிலே கட்டியெழுப்பப்பட்டுள்ள குழந்தையேசுவின் அர்ச். தெரேசம்மாள் மகாலயம் (பஸிலிக்கா) இம்மாதம் 11-ந் திகதியன்று அபிஷேகஞ்செய்யப்படலாயிற்று. அநேகவருடங்களாகக் கட்டப்பட்டுவந்த இம்மகாலயம் கருதினால் பச்செல்லி ஆண்டவரால் (தற்போதையபாப்பரசர்) 1927-ம் ஆண்டு ஆசீர்வதிக்கப்படலாயிற்று.

— இமயமலைச் சிகரங்களில் ஒன்றும், நேபாளநாட்டில் உள்ளதுமான 26,795 அடி உயரமான டோலகிரியை வெற்றிகொள்ளுமாறு அதில் ஏறிச்சென்ற சுவிற்சர்லாந்த கோஷ்டியானது அதன்உச்சிக்குச் செல்லாமுன்னரே சுவாத்தியக்கெடுதி காரணமாக இறங்கிவிட்டதாகப் புதிய டில்லிநகரிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது.

— ரோமைநகரின் 138-வது விசாரணைப்பங்கு சமீபத்திலே ஓர்சனிக்கிழமை அந்நகரின் கருதினால் விக்கார் ஆண்டவராலே ஆரம்பித்துவிடப்படலாயிற்று. இது நொமென்ரானுவுக்கும், சலாறியாவுக்கும் இடையிலுள்ளது. அர்ச். மரியகொறெற்றிபோரால் அதிலே கட்டப்படும் புதிய கோவிலானது மூன்றுமாதத்தில் முற்றுப்பெற்று, முப்பதினாயிரம்மக்களின் ஞானதேவைகளைப் பூர்த்திசெய்வதாகும்.

—இரண்டாவதுஉலகயுத்தம் நடந்தபோது, பசிபிக்சமுத்திரத்திலே அமெரிக்க கடற்படையின் பிரதமசேனாபதியாக இருந்தவரான அட்மிறல் செஸ்றர் நிமிற்ஸ்அவர்களின் புதல்வியான 21 வயசுடைய செல்விமேரி மன்சன் ஓர் கன்னியாஸ்திரியாகவிருக்கின்றாள். தனதுபெற்றார் புறொட்டஸ்தாந்தராயினும் இவள் கத்தோலிக்க திருச்சபையில்சேர்ந்துகொண்டாள்.

— மேற்கிந்திய தீவுகளிலுள்ள தொமீனிக்கன் குடியரசுநாடு ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்துக்குத் தனதுபிரதிநிதியாக வண. ஒஸ்கார் றொபெடானோ சுவாமியாரைத் தெரிந்து நியமித்திருக்கிறது. சர்வதேச ஸ்தாபனத்திலே கம்யூனிஸத்தை எதிர்த்துப்போராடுவதற்குக் கிறீஸ்து வேத விசுவாசமும், பிறர்சிநேகமும் அவசியமென்பதை உணர்ந்தே அந்நாட்டு அரசாங்கம் இவரை நியமனஞ்செய்துள்ளது.

— செண் வின்சென்ற்டீபோல் சபையினை அடியிட்டவரான பிறெடெறிக் ஓசானம் அவர்கள் பரமபதமடைந்த நூற்றாம்ஆண்டுவிழா பரீஸ்நகரிலே வருகிற புரட்டாசிமாதம் கொண்டாடப்படும்போது, அதிலே தமது பிரதிநிதியாயிருந்து செயலாற்றுமாறு பரிசுத்த பாப்பரசர் பரீஸ்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் பெல்ரின்ஆண்டவரை நியமனஞ் செய்திருக்கின்றார்.

— யூகோசிலேவியாநாட்டின் கம்யூனிஸ்த சர்வாதிகாரியான ரிற்றோவினது கட்டளையின்பேரிலே தமதுசொந்தக் கிராமத்தில் சிறைவைக்கப் பட்டிருக்கின்ற கருதினால் ஸ்ரிபினக்ஆண்டவர் நோய்வாய்ப்பட்டு வருந்துவதாகவும், அது கடுமைப்படுத்துமுன்னரே அதிகம்நல்ல சுவாத்தியமுள்ள ஓர் இடத்துக்கு அவரை அனுப்பிவைக்குமாறு டக்றர்மார் அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியிருப்பதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது.

—- அயர்லாந்துதேச டபிளின் நகரிலே ஓர்தொழிலாளியாகச் சீவித்திருந்து பரமபதமடைந்த மற் தல்பொத் என்பவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுவதற்கென அவரை நன்கு அறிந்த அந்நாட்டின்ஜனாதிபதி கெல்லி அவர்கள்உட்பட நாற்பதுசாட்சிகளின் சாட்சியம் திருச்சடங்காசார திருச்சங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இத்திருப்பட்ட விசாரணைபற்றிய அடுத்தநடவடிக்கை ரோமாபுரியில் எடுக்கப்படும்.

## பேரீச்சம்பழம்

தித்திப்புள்ள தின்பண்டம் யாருக்குத்தான் பிடிக்காது? ஆனால், டக்றர்மார் என்னமோ தித்திப்புள்ள பண்டங்களைத் தின்பதால் பற்கள் கெட்டுவிடுகின்றனவென்றும், அதன் விளைவாக உடல்நலம் பாதிக்கப்படக் கூடுமென்றும் சொல்லிவருகிறார்கள். பற்களுக்குக் கெடுதிஉண்டுபண்ணாமல் தித்திப்புள்ளதின்பண்டங்களைச் சாப்பிடுவதால் கிடைக்கக்கூடிய இன்பத்தையும், போஷணையையும் கொடுக்கக்கூடியபொருள் ஏதாவதுஇருக்கிறதா என்றுகேட்டால் பேரீச்சம்பழம் இருக்கிறதுஎன்று போஷணைநிபுணர்கள் கூறுகின்றனர்.

பேரீச்சம்பழம் இந்தியாவிலும் சுலபமாகக் கிடைக்கிறது. ஆனால், மிகச்சிறந்தபழங்கள் அராபியாவிலிருந்தே கிடைத்துவருகின்றன. அராபியர்கள் பேரீசசம்பழங்களையும், அவர்கள் ஏறிச்செல்லும ஒட்டகங்களின்பாலையும் மாத்திரம உணவாகக்கொண்டு மாதக்கணக்கில் பாலைவனத்தில் பிரயாணம் செய்கிறார்கள்என்று கூறப்படுகிறது. அன்றாடஉணவில் இயற்கை உணவுப்பொருட்களின முக்கியத்துவம் பற்றி அதிகமசொல்ல வேண்டியதில்லை. உடல்வளர்ச்சிக்கு அத்தியாவசியமான சத்துப்பொருள்கள் இயற்கைஉணவுகளில் அதிகமாகஉள்ளன. ஆனதால் செயற்கைமுறைகளைக் கையாண்டு பக்குவம்செய்யப்படாமல் இயற்கையாகஉள்ளபடியே உட்கொள்ளப்படும் எந்தஉணவும் உடம்புக்கு நல்லதாகவேஇருக்கிறது.

பேரீச்சம்பழமும மிகநேர்த்தியான ஓர் இயற்கைஉணவாகும். அன்றாட உபயோகத்தில் எந்தஒரு தனிஉணவு வகைக்குமஉள்ள எல்லா அம்சங்களும பேரீச்சம்பழத்தில் நிறைந்துள்ளன. "சேர்த்துவைக்கப்பட்டிருக்கும் சூரிய வெளிச்சம" என்று ஒருவர் இதற்குப் பெயர் வைத்திருக்கிறார். இது மரத்தில்இருக்கும்போதே சூரியவெப்பத்தினால் கனிந்துபழமாகிறது. "ஈச்சமரத் தின் தலை நெருப்பிலும், பாதமதண்ணீரிலும் இருக்கவேணடு"மென்றுகூறும் அராபியப் பழமொழிஒன்று இருக்கிறது. ஈசசமரங்கள் வளருவதற்கு வேணடிய உணவுச்சத்தைப் பூமிக்கடியில் அதிகஆழத்திலிருந்து கிரகித்துக்கொள்ளுகின்றன.

பேரீச்சம்பழத்தை வயதுவித்தியாசமின்றிச் சிறுவர்களும், பெரியவர்களும் உட்கொள்ளலாம. இயற்கைச் சாக்கரைகள் இதில் அபரிமிதமாக அடங்கியுள்ளன. ஆதலால் இவைகள் அதிகம்விரைவிலே இரத்தத்தில் கலந்துவிடுகின்றன. இயற்கைமுறைப்படியே பக்குவப்படுத்தப்பட்டதும, கொழுப்புச்சத்து அற்றதுமான சர்க்கரையே பேரீச்சம்பழத்தில் உள்ளது. சாதாரணமாகஉபயோகிக்கப்படும சர்க்கரையிலும், அந்தச்சர்க்கரையில் செய்யப்பட்ட தின்பணடங்களிலும் காணப்படும கெடுதியான அம்சங்கள் இவற்றில கிடையா. மேலும உடல்வளர்ச்சிக்கு அத்தியாவசியமான புரொட்டீன போன்ற உணவுச்சத்துக்களும் பேரீச்சம்பழத்தில் உள்ளன. இரத்தவிருத்திக்கும், எலும்பையும்பற்களையும் உறுதிப்படுத்துவதற்கும் அத்தியாவசியமான அயம், கல்ஸியம்போன்ற சத்துக்களும் பேரீச்சம்பழத்தில் மிக அதிகமாக உள்ளன. மக்னீஸியம், சோடியம், பொட்டாஸியம், பொஸ்பரஸ்முதலிய சத்துக்களும் பேரீச்சம்பழத்தில் அடங்கியுள்ளன. "ஏ"விற்றமினும், பி-1, பி-2 விற்றமின்களும், பி காம்ப்ளெக்ஸ் விற்றமினும் இதில் நிறையஇருக்கின்றன. ஆனால் "ஸி. டி." விற்றமின்கள் மிகசசொற்பமாகவே இருக்கின்றன.

உடல்வளர்ச்சிக்கு இந்தப்பொருட்களெல்லாம் அத்தியாவசிய மானவையாகும். ஒருஅவுன்ஸ் மாமிசத்தில் கிடைப்பதைவிட மூன்றில்ஒருபங்கு

## நான்காவது உந்நதசிகரம்

இமயமலையிலே "சாவின்மலை" என்று அறியப்படுவதாய் 26,620 அடி உயரமான நங்காபர்வதம்என்ற சிகரத்தின் உச்சிமீது ஆஸ்திரிய – ஜேர்மனிய மலையேற்றக் கோஷ்டிஒன்று ஏறி அதனை வெற்றிகொண்டு விட்டதாகச் செய்திகிடைத்திருக்கிறது. இந்தச் சிகரம கடந்த இருநூற்றாண்டுகளாக மலையேற்றகாரரைத் தோற்கடித்துவந்ததாம். ஹெர்மன் புஹிஎன்ற ஆஸ்திரியர் இம்மாதம் 4-ந் திகதியன்று அதன் உச்சியில் மேற்குஜேர்மனிய, பாகிஸ்தான்கொடிகளை நாட்டினர். உலகின் நான்காவது மகாஉந்நதமான மலைச்சிகரம்இதுவாகும். இவர் அன்றுகாலை 10 மணிக்கு அதன்மேல் ஏறினார். அப்போது ஆகாயம் மிகத்தெளிவாயிருந்ததாம்.

## நடிகையின் திருமணம்

அமெரிக்க பிரபல சினிமாநடிகையாகிய ஆன்பிளித்எனும் மாதுக்கும், பிரசவவைத்தியரான டக்றர் ஜேம்ஸ் மைக்னல் அவர்களுக்கும் ஹொலிவூட்டிலே சமீபத்தில் கருதினால் மைக்கின்ரையர் ஆணடவரால் திருமணம்நிறைவேற்றிவைக்கப்பட்டது. சான்பெர்னாடோவலி எனுமிடத்திலுள்ள அர்ச். சாள்ஸின் ஆலயத்தில் நிறைவேறியஇத்திருமணவைபவத்திற்குச் சமுகமளித்திருந்த விருந்தாடிகளான அறுநூறுபேருள் கீர்த்திவாய்ந்த சினிமா நட்சஸ்திரங்களும் அடங்கியிருந்தார்கள். கருதினால்ஒருவரால் ஹொலிவூட்டில்நிறைவேறிய முதலாவது திருமணம் இதுவாகும். அத்தருணம் பரிசுத்தபாப்பரசர் புதுமணத்தம்பதிகளுக்குத் தமது விசேஷஆசீர்வாதம் அனுப்பிவைத்திருந்தார்.

## கருதினாலின் சகாயம்

செஞ்சீனாவின் பக்கமாகவுள்ள ஹொங்கோங்தீவிலே கத்தோலிக்க சேமவாழ்வுநிலையமானது நியூயோக் அதிமேற்றிராணியாரான கருதினால் ஸ்பெல்மன் ஆண்டவரிடமிருந்து மேலும் 24,000 டலர் நன்கொடையாகப்பெற்றிருக்கின்றது. செஞ்சீனாவில் இருந்து தப்பியோடி அங்குபோய்ச் சேர்ந்துள்ள பெருந்தொகையான அகதிகளின் சமய, கல்வி, நல்வாழ்வு சம்பந்தமாக நான்கு புதியநிலையங்களை அமைக்க இப்பணம் செலவிடப்படும். இவைபோலும் ஐந்து நிலையங்களை அமைப்பதற்கென்று கருதினால்ஸ்பெல்மன் ஆண்டவர் முன்பு 30,000 டலர் உபகரித்திருக்கின்றார். அங்கு இவர் சிலநாள் தங்கியிருந்து அகதிகள்படும் கஷ்டநஷ்டங்களைத் தமது கண்ணாரக் கண்டிருக்கின்றார்.

---

அதிகமான அயச்சத்து அடங்கியுள்ள பேரீச்சம்பழத்தில் கிடைக்கிறது. பேரீச்சமபழத்துடன் பாலையுமசேர்த்துக்கொணடால் முழுஉணவு கிடைத்துவிடுகிறது. ஒருறாத்தல் பேரீச்சமபழமும், ஒருசேர் பாலும சாதாரணமனிதர் ஒருவருக்கு ஒரு நாளைக்குப் போதுமான உணவாகும.

உணவுப்பொருளாகப் பயன்படுத்துவது மாத்திரமன்றி, மலச்சிக்கலுக்கு நல்லமருந்தாகவும் இது உதவுகிறது. காந்திஜீ பேரீச்சம்பழத்தையும், வெள்ளாட்டுப்பாலையும், பழங்களையுமே புசித்துத் திடகாத்திரமாக வாழ்ந்துவந்தார். உணவுப்பொருளாக உபயோகிக்கும் பேரீச்சம்பழம் நல்லஇடத்திலிருந்து கிடைத்ததாக இருக்கவேணடும். சாதாரணமாகக் கடைகளில் விற்பனவுசெய்யப்படும் பேரீச்சம்பழங்களில் பெரும்பாலானவை அசுத்தமும், தூசியும் கலந்தவையாக இருக்கின்றன. அவற்றை நன்றாகக்கழுவிய பிறகே உட்கொள்ளவேண்டும். பேரீச்சம்பழத்தை ஒரேசமயத்தில் அளவுக்குமிஞ்சிச் சாப்பிடுவதால் அசீரணம் ஏற்படக்கூடும். ஆனதால் உணவுஉட்கொள்ளும்போது கொஞ்சம் பேரீச்சம்பழத்தையும் சேர்த்துக்கொண்டு அதைநன்றாக மென்று உட்கொள்வதுநல்லது.

## சுதேச வர்த்தமானம்

### யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

ஆண்டிலே இரண்டாம்முறையாக நடந்தேறும் யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு வருகிறஆவணிமாதம் 17-ந்திகதி ஆரம்பமாகி நடைபெறுமென அறிகின்றோம். மட்டக்களப்புச் சுப்பிறீங்கோடு சென்றதிங்கட்கிழமை ஆரம்பமாயிற்று. புதிய அசைஸ்கம்மிஷனர்களில் ஒருவரான சங். வி. எஸ். ஜயவிக்கிரம அவர்கள் விசாரணை நடத்தி வருகின்றார்.

### அறுபத்தேழு கொலைவழக்குகள்

ஆண்டிலே மூன்றாம் முறையாக நடந்தேறும கொழும்புச் சுப்பிறீங்கோடு சென்றவெள்ளிக்கிழமை ஆரம்பமாயிற்று. புதியநீதியரசர்களில் ஒருவரான சங். வீரசூரியஅவர்கள் விசாரணையைத் தொடக்கியிருக்கின்றார். இம்முறை அதிலே விசாரணைக்குப் பாரப்படுத்தப் பட்டுள்ள வழக்குகள் 115. இவற்றிலே கொலை வழக்குகள் 67.

### மந்திரியாரின் எச்சரிக்கை

தற்போதுஒருபடி 1 ரூபா 20 சதம் வரையிலே விலைப்பட்டுவருகின்ற ஊர் அரிசியின் கூடியவிலையைத் தனிப்பட்ட வியாபாரிகள் குறைக்காவிடின் இறக்குமதிசெய்தஅரிசியைக் கூப்பன்அரிசிக்குப்புறம்பாகப் படிஒன்று 85 சதவீதம் விலைப்படுமாறு பெருந்தொகையாகத் தாம் விற்பனைக்குவிடுவதாக உணவு—கமத்தொழில் மந்திரியார் கூறி அவர்களை எச்சரித்திருக்கின்றார். அரிசி வியாபாரத்தை நடத்தத் தாங்கள் ஏன் அனுமதிக்கப்படவில்லை; அனுமதித்தால் அரிசியை மிகவும்மலிவாகவிற்கத் தங்களால் முடியுமென இவர்கள் சொல்லுகின்றனர்; ஆனால் பிறநாட்டு அரிசிவியாபாரத்தை இவர்களிடம் நான் ஒப்படைக்கவே மாட்டேன்; இந்த யோக்கியவான்கள் யுத்தத்தின் அபாயகரமான அந்தநாட்களில் எவ்வாறு நடந்துகொண்டார்கள்என்பதை நான்அறிவேன்; அந்தவேளைகூட்டுறவுச்சங்கங்களே நிலைமையைச்சமாளித்தனவென்று அவர்கூறலாயினர்

### 18 லட்சம்புசல் நெல்

கீழ்மாகாணத்தைச்சேர்ந்த கமக்காரர் தங்கள்சிறுபோக நெல்வேளாண்மையை அறுவடைசெய்து வருகின்றார்கள். அதன்விளைவாக அடுத்தஇருமாசங்களிலும் 18 லட்சம் புசலுக்கு மேற்பட்டநெல்லை விற்பனைசெய்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது கீழ்மாகாணம்முழுவதிலும் 62,000 ஏக்கர்வயலிலே அறுவடை நடைபெறுகின்றது. அதிலே ஆடவர்களும், பெண்களும், பிள்ளைகளும் ஊக்கமாகஈடுபட்டிருக்கிறார்கள். இம்முறைஅங்கே ஏக்கர்ஒன்றுக்கு முன்னில்லாதவிதமாகச் சராசரியாய் 30 புசல்வீதம் நெல் விளைந்திருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது. இதற்குமுன் 20 முதல் 25 புசல் வரையில்தான் விளையலாயிற்று. நாற்பிட்டிமுனையிலுள்ள வயல்ஒன்றில் ஏக்கருக்கு 120 புசல்விளைந்திருப்பதாக மதிப்பிடப்படுகிறது. இந்தவிகிதம் இலங்கையில் மாத்திரமல்ல, உலகத்திலேயே மிகக்கூடியதொன்றாகும். இம்முறை கீழ்மாகாணத்தில் அதிகமான நெல்விளையக்காரணம், நன்றாகவயல்கள் நீர்ப்பாய்ச்சப்பட்டமையும், கமக்காரர் புதியமுறைகளைக் கையாடியமையுமேயாம்.

### அரைமணிநேர இருட்டு

காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையிலுள்ள மின்சார பவர் ஸ்றேஷன் சென்ற செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிவரையில் திடீரென இயங்காமல் நின்றுவிட்டது. அதனால் அதிலிருந்து கறென்ற்பெற்றுவருகின்ற யாழ்ப்பாணப்பட்டணமுழுவதும் அரைமணிநேரம்வரையில் மின்சாரவிளக்குகள் அணைந்துவிடவே, எங்கும் இருளடர்ந்துகாணப்பட்டது. அவ்விளக்குகள்அணைந்துபோன வீடுகளிலெல்லாம் ஒரே அமளியாயிருந்தது. அரைமணிநேரத்தின்பின் பார்வையடைந்த குருடனைப்போன்று பட்டணமும் பிரகாசத்தைக்கண்டது.

## அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்



### நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் மன்றாட்டங்களும்

போளவத்தை :— எங்கள் சங்கம் சேர்ந்து சீட்டு நடப்பித்ததில் பல கஷ்ட நஷ்டங்களுக்கு வழியாயிருந்த போது, அர்ச். அந்தோனியாரை மன்றாடினேன். அவரின்உதவியால் எல்லாம் சமாதானமாய் முடிந்தன. நன்றியாக அவரது ஏழைகளின் தரும அப்பத்திக்குக் காணிக்கையாக ரூபா 5 அனுப்புகிறேன்.

W. T.

தங்கோட்டுவா :— கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான அர்ச். யூதா ததேயுவிடமும், முத்திப்பேறுபெற்ற அர்ச். மாட்டீன் தேபொரஸ்பரிடமும் நான்கேட்டமன்றாட்டு அனுகூலமானபடியால் ஏழைகளின் தரும அப்பத்துக்குக் காணிக்கைஅனுப்பி இதைப் பிரசுரிக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பி. ஹெலன்மிராண்டா

### கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

கல்லில்லா : ஏ. எல். லைமன் 5-00 — முஜக்கதமுவை : டபிள்யு. எம். பெர்னாண்டோ 2-00 — கம்பளை : மிசெஸ். ஏ. டி. சேவியர் 3-00 — கிரிஎல : கே. ஏ. மாரிமுத்து 5-00—அரிப்பு : எம். பி. யக்கோ 2-00—கல்கமுவா: பி. குருசுமுத்து 3-00 —மாம்புரி : பிறுங் எல். லீயோ 3-00 — பூனகல : ஜே. அந்தோனியம்மாள் 5-00 — யாழ்ப்பாணம் : எஸ். ஏ. 2-00 — டெனியா : எம். பொன்னையா 5-00 — பீற்றப்பிற்றற : ஏ. ஜே. பிலிப்பையா 7-00 — பண்டாரவளை: எவ். போல் பீற்றர் 2-00 — அடம்பன் : ஏ. அந்தோனி 2-00—மடுசீனு: எம். அந்தோனிப்பிள்ளை 2-00 — அச்சுவேலி : எவ். பி. ஆசைப்பிள்ளை 2-00—கல்கமுவா: எம். சந்தியாப்பிள்ளை 1-50, ஏ. மரியாம்பிள்ளை 3-00, ஏ. சந்தியாப்பிள்ளை 1-00, எஸ். செபஸ்தியாம்பிள்ளை 1-00, ஏ. பாவிலுப்பிள்ளை 1-00, எஸ். மரியாம்பிள்ளை 1-00, எஸ். செபஸ்தியாம்பிள்ளை 1-00, ஏ. மரியம்மா 1-00—சிங்கப்பூர்: எஸ். பிரான்சீஸ் 9-58 —சிலாபம் : வி. டி பி. பெறேரு 3-00— சண்டிருப்பாய் : எம். அருளப்பு 2-00 — சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 20-00— கற்றன் : பி. ஏ. மைக்கல் 5-00 — சூராவத்தை : சங்கரப்பிள்ளை மரியதாஸ் 2-00 —கம்பளை: மிசெஸ் ஏ. டி. சேவியர் 2-00 — உடப்புசலாவை : எம். அந்தோனிப்பிள்ளை 5-50 — மஸ்கேலியா : டி. எஸ். பீற்றர் 10-00 — அக்கரபற்றன: எல். ஏ. எஸ். தோமஸ் 3-00—கற்றன்: அரியரிலா 2-00 — மஸ்கேலியா : எம். நீக்கிலாப்பிள்ளை 2-00 — கொழும்பு : எம். நீக்கொலாஸ் 5-00— எட்டியாந்தோட்டை : ஆர். ஞானம்மாள் 2-00—செட்டிகுளம் : ஜே. இராயப்பு 12-00 — யாழ்ப்பாணம் : வி. சி. வஸ்தியாம்பிள்ளை 5-00 — ஏழாலை : கபிரிகேல் 2-00 — போளவத்தை: வி. கர்லீனுதமேல் 3-00 — திரிகோணமலை : தோமஸ்மோசேஸ் 1-50 — மலாயா : ஏ. எம். யேக்கப் 9-93 — பண்டாரவளை : ஜோண் அந்தோனியம்மாள் 2-00, சூசைமரி பீற்றர் 1-50 — குருணாகல் : ஜி. எஸ். சின்னத்துரை 2-00 — போளவத்தை : டபிள்யு. ரி. 5-00 — பாணந்துறை : ரி. மனுவல் 2-00 — கேகாலை : ஏ. டி. யுவக்கீம் 10-00—வேப்பங்குளம் : கே. சின்னப்பு 3-00, எஸ். மாற்கு 1-00 — முந்தல் : எம். அந்தோனிப்பிள்ளை 2-00 — மலாயா : எஸ். யோசெவ் 13-25 — மஸ்கேலியா : கபிரிகேல் 1-50, ஆர். எல். ஞானப்பிரகாசம் 2-00—மலாயா: ஜே. சவிரிமுத்து 30-00 —உடப்புசலாவை : எஸ். எம். யோசெவ் 20-00—கொச்சிக்கடை: கே. எம். பிரான்சீஸ்கா 10-00, பி. எஸ். கயித்தான் 5-00 பூனைப்பிட்டி: பி. பேதுரு பறுனாந்து 3-00 —உடப்புசலாவை: ஏ. எஸ். பீற்றர் 6-00 —டெனியாயா : எம். ஜி. தோமஸ்பிள்ளை 10-00—முள்ளிக்குளம்: ஜி. குருஸ் 1-00 — தலவாக்கொலை: வி. பிச்சை 1-00 — கருக்குப்பனை : ஜே. பி. ஏ. 5-00 — கரவெட்டி : எஸ். பஸ்ரியாம்பிள்ளை 1-00, பி. கபிரிகேற்பிள்ளை 1-00— தலைவில்லு; ஏ. இ. லேயோ 5-00 — அம்பிற்றியா : எம். டானியல் 1-00—பாஷையூர்: மடுத்தீஸ் எலிசபேத் 5-00—செட்டிகுளம்: ஜே. இராயப்பு 10-00— மண்டைதீவு: எஸ். ஆர். ஞானதிக்கம் 2-00—மடுல்சீமா : எம். அந்தோனிப்பிள்ளை 2-00 — வண்டுறும்ப : விக்றர் ஜே. சகாயம் 1-00 — கந்தானை : மிசெஸ் ரி. பி. வின்சென்ற் 1-00 — லின்டுலா : எஸ். ஜே. செபஸ்ரியன் 2-00—அம்பிற்றியா: எல். யோசேப் 1-00 -- முருங்கன் : ஏ. பி. இன்னாசியா 1-00 — முந்தல் : ஏ. வின்சென்ற் 1-00, ஏ. எல்ட்டன் 1-00, செல்லம்மா 1-00 — கல்கமுவா : ஏ. மரியானுள் 1-00 — வேப்பங்குளம் : எம். பி. பிலோமினம்மா 1-00—முள்ளிக்குளம் : கே. வலத்திசார் கூஞ்ஞு 1-00.

The Director,
St. Joseph's
Conference.
Bishop's House.
JAFFNA.

சென் வின்சென்ற் டீ போல்சபைத்தலைவர்
மேற்றிராசன மாளிகை
யாழ்ப்பாணம்.


# சிலோன்


இன்ஷுரான்ஸ் கம்பெனி லிமிட்டெட்

இலங்கையரின் முதலாவது இன்ஷுரான்ஸ் கம்பெனி
முதன்மையாகவே இன்னும் விளங்குகிறது.

* * *

ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்யக்கூடிய போலிஸி!

ஒவ்வொருவரின் தேவைக்கும் தகுந்ததான போலிஸி!



தலைமை ஆபீஸ் : 69, ராணி வீதி, கொழும்பு
டெலிபோன் : 6241, 6242, 6243.

கிளைகள் :

| | | | |
|---|---|---|---|
| காலி | அம்பலாந்தோட்டை | | மட்டக்களப்பு |
| கண்டி | யாழ்ப்பாணம் | | சிலாபம் |
| களுத்துறை | நீர்கொழும்பு | | நுவரேலியா |
| மாத்தறை | பதுளை | ரத்னபுரி | குருணாகலை |

மொத்த மூலதனம் 75 லட்சம் ரூபா

தி சிலோன் இன்ஷுரான்ஸ் கம்பெனி லிமிட்.

கீழ்க்கண்ட இன்ஷுரன்கள் இயற்றப்படும் :
ஆயுள், தீ, மோட்டார், பொதுநஷ்டஈடு, கப்பல்சேதம் முதலியன
சேவையின்மூலம் பாதுகாப்பளிப்பது.


### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அண்டிவந்தோர்க்கு அன்புடன் அருள்புரியும் அடைக்கலமாதாவின் தயவினாலும், இரக்கம்நிறைந்த திருமுகத்தின் கருணையாலும் நாங்கள் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளோம். அவர்கள்நாமம் புகழப்படுவதாக.

புத்தளம் C. V. & M.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயஇரக்கத்தினாலும், இடைவிடாத சகாயமாதாவின் அனுக்கிரகத்தினாலும், பிதாப்பிதாவாயிருக்கிற அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். செபத்தியார், அர்ச். சவேரியார், அர்ச். திரேசம்மாள் இவர்களின் மன்றாட்டாலும் நாங்கள் கேட்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றோம். இன்னும் சகாய மாதாவின் இரக்கம் எங்கள் குடும்பத்தில் எப்பொழுதும் இருப்பதாக.

ஊறணி, ம. குரூஸ்.

### GOVT. TENDERS

#### Kachcheri Jaffna

N2006—Sale of the exclusive privilege of selling arrack in the Arrack Taverns of the Jaffna Dist. for the year 1953—54 will be held at the Jaffna Kachcheri at 10 a. m. on 3-8-53. For particulars see Part I—Section II, Govt. Gazette, 17-7-53, copies of which are available for perusal at all Post Offices.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 16-1953